Computer Programing
in Basic Language
Sat. Sun Classes
Commensment 26.5.90
Fees only 300/- per Month
School of Business
Administration
16, 3rd Cross Street
JAFFNA

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 108 வியாழன் 24-05-1890 (வைகாசி 10) ஷவ்வால் 28

For Accountants Bankers
Managers
Individual Classes in
LOTUS 1, 2, 3
To Suit Convenience
Personal Attention
School of Business
Administration
16, 3rd Cross Street
JAFFNA

# பாராளுமன்றத்தில் நேற்று அமைச்சர் ரஞ்சன் வெளிநடப்பு

## புலிகள் பற்றி அதிகம் கேள்விகள் எழுந்ததினால் சினத்துடன் வெளியேற்றம்

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன நேற்று பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பல எதிர்க்கட்சி எம்பிகள் விடுதலைப் புலிகள் பற்றி கேள்விகளைக் கேட்டனர். இதனால் சினமடைந்த அமைச்சர் வெளிநடப்பு செய்தார்.

"எப்போதும் பாராளுமன்றத்தில் புலிகளைப்பற்றி கேட்கிறீர்கள்" என்று ஆத்திரத்துடன் கூறியபடி அமைச்சர் வெளியேறினார்.

இது குறித்து எதிர்க்கட்சி எம்பிகள் சபாநாயகரிடம் முறையிட்டனர், தாம் முடிவு தெரிவிப்பதாக சபாநாயகர் தெரிவித்தார்.

## 35 லட்சம் பேர் தகுதியிருந்தும் இலங்கையில் வேலை இல்லை

தற்போது இலங்கையில் 36 லட்சம் பேர் வேலை செய்யக் கூடிய தகுதியிருந்தும் வேலை இன்றி உள்ளார்கள் இவ்வெண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டுகளிலும் அதிகரித்து வருகின்றது. 2000ம் ஆண்டுகளில் இலங்கையின் வேலையில்லாப் பிரச்சனை மோசமாக அதிகரிக்குமென ஆய்வுகளில் இருந்து தெரிய வந்துள்ளது. வருடா வருடம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் வேலை செய்யும் வயதை அடைந்து வருகின்றார்கள் என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது. (03)

## திருமலையில் இரு முகாம்கள் முற்றாக மூடப்பட்டன

திருமலையில் உள்ள பன்குளம் இராணுவ முகாம், பாலம் பட்டாறு தடைமுகாம் ஆகிய இரண்டும் நேற்று முன்தினம் மூடப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இங்கிருந்த அனைத்து இராணுவத்தினரும் வெளியேறி விட்டனர். விடுதலைப் புலிகளுக்கும் அரசு தரப்பிற்கும் அண்மையில் இடம்பெற்ற பேச்சுக்களையடுத்தே இந்த இரு முகாம்களும் மூடப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## உர விலை குறைந்தது

உரத்தின் விலையை உடனடியாக குறைப்பது என அரசாங்கம் முடிவு செய்துள்ளது, ஒரு மெற்றிக் தொன் உரத்தின் விலை 620 ரூபாவாக விலை குறைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகின்றது.

## கிளிநொச்சி தெங்கு பனம் கூட்டுறவுச் சங்கம் சாதனை

கிளிநொச்சி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கத்தினால் புதிய சாதனை ஒன்று நிலை நாட்டப்பட்டது. வடமாகாணத்தில் அதிக கூடிய இலாபத்தை பெற்றுக் கொண்ட தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் என்ற சாதனையே நிலை நாட்டப்பட்டுள்ளது. கிளிநொச்சி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு இவ்வருட தைமாத

—08 ஆம் பக்கம் பார்க்க

## வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வடக்கில் பெறமுடியாத நிலை

வடபகுதியில் வாகனசாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு மோட்டார் வாகன அனுமதிப்பத்திர பரிசோதகர் இல்லை.

கடந்த சில வருடங்களாக சம்பந்தப்பட்ட பரிசோதகர்கள் கச்சேரிகளில் சேவைக்கு நியமிக்கப் படாததால் இப்பகுதி மக்கள் தென்பகுதிக்குச் சென்று பெரும் கஷ்டத்தின் மத்தியில் அனுமதிப்பத்திரம் பெற வேண்டியுள்ளது.

அதேவேளை வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களில் பயிற்றுவிக்கப்பட்ட சாரதிகள் தம் வாகன அனு

— 08 ஆம் பக்கம் பார்க்க

## வடக்குக் கிழக்கு வைத்தியசாலைகளுக்கு பிரிட்டனின் உபகரணங்களை வழங்க போக்குவரத்து ஒழுங்கு

வடக்குக் கிழக்கு வைத்தியசாலைகளுக்கு பிரிட்டன் நாட்டிலிருந்து கிடைக்கவுள்ள 70 பாரிய கொள்கலன் அடங்கிய உபகரணங்களை வடக்குக்கிழக்குப்பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்கான போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கொள் கலன்களிலுள்ள பாரிய ஜெனரேட்டர்கள், எக்ஸ் கதிர் உபகரணங்கள், குளிரூட்டிகள் போன்ற பலஉபகாரணங்கள் அடங்குகின்றன.

இது குறித்து முன்னர் முரசொலி செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

யாழ்ப்பாண மாவட்டத்

—08ஆம் பக்கம் பார்க்க

## வட,கிழக்கு 350 ஆரம்ப ஆசிரியர் பதவியிழப்பு இவர்களின் ஆவணங்கள் திணைக்களத்தில் மாயம்

வடக்கு, கிழக்கு ஆரம்பப் பாடசாலை ஆசிரிய நியமனத்தில் 350 ஆசிரியர் நியமனத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கல்விச் சேவைகள் ஆணைக்குழு நடாத்திய ஆய்வின் போதே மேற்படி முறைகேடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக இந்த ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது தொடர்பான ஆவணங்கள் ஒன்றும் கல்விச்சேவைகள் ஆணைக்குழுவிடம் இல்லை என்பதும் அவை மாயமாகி விட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இப்போது இந்த 350 நியமனங்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸ் விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆகஸ்டில் நடைபெறும்

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப்பரீட்சை எக்காரணம் கொண்டும் பின் போடப்பட மாட்டாது என உயர்கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

முன்னர் இப் பரீட்சை டிசம்பர் மாதம் நடைபெறலாம் என செய்திகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

## வீடமைப்புக்கான கடன் விண்ணப்ப திகதி நீடிப்பு

15 இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கிராமிய வீடமைப்புக் கடன் பெறுநர்களைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னர் குறிப்பிட்டிருந்த அறிக்கையில்விண்ணப்பப் படிவம் 23ந் திகதி வரையுமே வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் பதிவு செய்வதற்கு உத்தேசிக்கப்

— 08 ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டு தூதுவர்கள் புலிகள் யாழ்நகரில் பேச்சு

விடுதலைப் புலிகளின் பிரமுகர்களைச் சந்திக்க கனடா பிரிட்டன், அவுஸ்ரேலியா, இலங்கைக்கான தூதுவர்கள் யாழ் வரவுள்ளனர்,

இவர்கள் அடுத்தவாரம் யாழ் வரவுள்ளனர்

இதேசமயம் நேற்று அமெரிக்க தூதராலய அரசியல் செயலாளர்கள் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களை யாழ்நகரில் சந்தித்தனர்

## ஹமீத் 28ல் யாழ் வருவார்

அமைச்சர் ஹமீத் விடுதலைப் புலிகளுடன்பேசமீண்டும் யாழ்ப்பாணம் 28ம் திகதி வரவுள்ளார்

கடந்த பேச்சுக்களின்போது விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளுக்கான ஜனாதிபதியின் பதிலுடன் அவர் வரவுள்ளார் என்று புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தனர்

## பிரேமா- வி.பி. சிங் பேசும்வரை மலையகம் பற்றி முடிவு இல்லை

இந்தியப் பிரஜாவுரிமை பெற்றவர்களை இந்தியா அனுப்புவது தொடர்பாகபிரதமர் வி. பி. சிங்கும் ஜனாதிபதி பிரேமதாஸவும் விரைவில் பேச்சுக்களை நடாத்துவார்கள் எனபெரும் தோட்ட தொழிற் துறை அமைச்சர் ரஞ்சன்விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

இப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப் படும்வரை இம்மக்கள் தொடர்பாக எவ்வித முடிவும் எடுக்கப்பட மாட்டாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# பொடிச் செய்திகள்

## அரச அதிபர் சங்கானை விஜயம்

(வட்டுக்கோட்டை)

வலிகாமம்மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு இன்றுகாலை 24—05—1990 வியாழக்கிழமை யாழ். அரசாங்க அதிபர் நேரடியாக விஜயம் செய்யவுள்ளார். மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு சுழிபுரம் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்திற்கு அருகில் 8½ லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் அலுவலகக் கட்டிட வேலைகளை நேரில் பார்வையிடுவதுடன் கிராமசேவகர் அலுவலகங்களையும் பார்வையிடுவார். அராலியில் அமைக்கப்பட்டுள்ள தும்புத்தொழிற்சாலையையும் இவ் விஜயத்தின் போது அரசஅதிபர் பார்வையிடுவார்.

## பத்தாவத்தையில் ஆலய விழா

இளவாலை பத்தாவத்தை புனித பிலிப்புநேரியார் வருடாந்த விழா நேற்று மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 3 நாட்கள் நவநாள் வழிபாடு நடைபெற்று 26ம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாட்பூசை கூட்டுத் திருப்பலியுடன் முடிவடையும்.

## எந்நேரமும் இதுசரியலாம்

(நாயன்மார்கட்டு)

யாழ்ப்பாணம் மாநகர சபையினால் பராமரிக்கப்படும் நாயன்மார்கட்டுப் பாரதி வீதியிலுள்ள இரண்டு மின்கம்பங்கள் உடைந்து எந்த நேரத்திலும் விழக்கூடிய நிலையில் உள்ளன.

இதனால் மேற்படி வீதியால் பிரயாணம் செய்யும் மக்கள் பெரும் பீதியுடன் செல்வதைக் காணமுடிகிறது. மின்கம்பங்களுக்குப் பக்கத்தில் குடியிருக்கும் மக்களும் எந்த நேரத்திலும் ஆபத்துக்கள் ஏற்படலாம் என்ற பெரும் யீதியுடன் குடியிருந்து வருவதைக் காண முடிகிறது. (33)

## பிராந்திய சபை பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். உதவி அரச அதிபர் பிரிவு சிக்கன சுடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் பிராந்திய சபையின் வருடாந்தப்பொதுக் கூட்டம் யாழ். மாவட்ட சமாச உப தலைவி செல்வி தங்கம்மா நல்லதம்பி தவைமையில் நடைபெற்றது.

பிராந்திய சபையின் புதிய தலைவராக எஸ். கந்தசாமி தெரிவுசெய்யப்பட்டார். கே. ஏப்பிரகாம்லிங்கன் உப தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். (36)

## கொழும்புத்துறை விநாயகர் மகோற்சவம்

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 31ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இவ் உற்சவத்தை முன்னிட்டு ஆலயசுற்றுப்புறத்தையும் ஆலய சூழலையும் சுத்தமாகவைத்திருப்பதற்கானசுகாதாரநடவடிக்கைகளை கொழும்புத்துறை இந்து இளைஞர் மன்றம் மேற்கொண்டுள்ளது

தேர்த் திருவிழாஉற்சவத்தின் போது அன்னதானம் வழங்குவதற்குச் தாகசாந்தி வழங்குவதற்கும் இம் மன்றம் ஏற்பாடு செய்துள்ளது. (33)

## சுன்னாகத்தில் லட்சார்ச்சனை

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான மஹோற்சவத்தை முன்னிட்டு மகா யாக சாலையில் ஐந்து குருமார்களினால் பஞ்ச குண்டங்கள் அமைத்து ஹோமமும் லட்சார்ச்சனையும் நடைபெறுகிறது.

அத்துடன் தினமும் இரவு ஏழு மணிக்கு வாரியாரின் பிரதம சிஷ்யன் ந.சிவசண்முகமூர்த்தியின் சங்கீத கதாப் பிரசங்கமும் நடைபெறுகிறது. (ப-2)

## நிர்வாகிகள்

மண்டைதீவு வான்மதி விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கழகத் தலைவர் திரு. த. சிவபரஞ்சோதி, ஜே. பி. தலைமையில் நடைபெற்றது.

நடப் பாண்டிற்கான நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது, விபரம் வருமாறு: தலைவர்;— திரு. த. சிவபரஞ்சோதி (ஜே. பி.) செயலாளர்:— திரு. ஏ.எஸ். சோமசுந்தரம். பொருளாளர்;- திரு. மா. சத்தியசீலன். உப. செயலாளர்:- திரு. சி. உமாபாலன் உப.தலைவர்கள்:- திரு. வீ. மாணிக்கவாசகர்:— திரு. ச' சிவபாதசுந்தரம்'

11 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ப.12)

## கட்டப்பிராயில்

(நாயன்மார்கட்டு)

கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலையத்தின்40 வது ஆண்டு விழா அடுத்த மாதம் நாடுப்பகுதியில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது'

விழாவை யொட்டி யாழ் மாவட்டரீதியில் ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி 6 பேர் கொண்ட கரப்பந்தாட்டப் போட்டி(ஓவர்கேம்) 16வயதுக்குட்பட்ட 6பேர்கொண்டகிரிக்கட் போட்டி என்பனவும் மற்றும் உள்ளூர் ரீதியிலும் 22 வயதுக் குட்பட்டவர்களுக்கான 15மைல் சயிக்கிள் ஓட்டப் போட்டி 5 மைல் மரதன் ஓட்டம் சிறுவர்களுக்கான விளையாட்டுகள் என்பனவும் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் நடைபெறும் திகதி முரசொலி பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும் போட்டியில் கலந்து கொள்ளும் கழகங்கள் வீரர்கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 28.ம் திகதிக்கிடையில் திரு. ஸ்ரீ. சண்முகநாதன்செயலாளர் கலைமணி விளையாட்டுக் கழகம் கட்டப்பிராய் லேன் கோப்பாய் தெற்குகோப்பாய் என்றவிலாசத்திற்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.(33)

## 'இராமாயண கதாதிலகம்'

கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவகாலங்களில் சம்பூர்ண இராமாயணம் பற்றி தொடர்விரிவுரை நிகழ்த்தி அடியார்கள் அனைவரையும் மகிழ்வித்த நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதின முதலாவது குருமகா சந்நிதானத்தின் பிரதம சீடன் கந்தர்மடம் பிரம்ம ஸ்ரீ சிவ. வை.நித்தியானந்த சர்மாவின் சைவ தமிழ் இசை சேவையினைப் பாராட்டி மேற்படி தேவஸ்தான பரிபாலன சபை 'இராமாயணகதாதிலகம்' என்னும் சிறப்புப் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது.

---

மட்டக்களப்பில்

# தொலைபேசி ஐயாயிரமாக அதிகரிக்க நடவடிக்கை

மட்டக்களப்பில் இப்போது உள்ள ஆயிரம் தொலைபேசி வசதிகள் அடுந்த வருடத்தில் ஐயாயிரமாக அதிகரிக்கப்படும்

இத்தகவலை மட்டக்களப்பு பிரதேசத் தொலைத் தொடர்பு பொறியியலாளர் திரு.வி ராஜேஸ்வரன் வெளியிட்டார்.

காத்தான் குடியிலும் களவாஞ்சிக் குடியிலும் இரு தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையங்கள் நிறுவப்படவிருப்பதையடுத்தே இவ்வாய்ப்பு ஏற்படவுள்ளது.

மேலும் அம்பாறை ஏறாவூர் கல்முனை மட்டக்களப்பு வாழைச்சேனை ஆகிய இடங்களிலுள்ள தொலை பேசிப் பரிவர்த்தனை நிலையங்களும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

## வானொலியில் இன்று

24.05.90 வியாழன்

காலை

| | |
|---|---|
| 5.00 | நாதாஞ்சலி |
| 5.05 | தோத்திரமாலை—பார்த்தசாரதி சுப்ரபாதம் |
| 6.30 | செய்திகள் |
| 6.40 | செய்தித்தாள் கண்ணோட்டம் |
| 6.50 | அறிவிப்புகள் |
| 7.30 | பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி |
| 7.45 | மாகாணச்செய்திகள் |

பகல்

| | |
|---|---|
| 10.00 | இசையமுதம் |
| 10.30 | தவில்கச்சேரி—வலயப்பிட்டி சுப்ரமணியம் |
| 10.45 | பக்திப்பாடல்கள் |
| 11.00 | வயலின்—வால்குடி ஜெயராமன், ஸ்ரீமதி |

மாலை

| | |
|---|---|
| 6.30 | வளரும் பயிர்—நடத்துபவர்: வனஜா ஸ்ரீநிவாசன் |
| 6.45 | பாவளம்—தொகுப்பு—சில்லையூர் செல்வராஜன் |
| 7.00 | கிராம சஞ்சிகை—வி. ஏ. சிவஞானம் |

இரவு

| | |
|---|---|
| 9.30 | கலந்துரையாடல்—சமூகவளர்ச்சியில் சிக்கனத்தின் பங்களிப்பு |
| 10.00 | இசைக்கச்சேரி—ஜி.சண்முகானந்தம் |
| 11.00 | ஒலிபரப்பு முடிவு. |


## முடிவுகள்

பளை இத்தாவில் அர்ச். பார்பிறா ஆலய கட்டிட நிதிக்காக 13.5.90 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

1ம் பரிசு
இல. 2468 சைக்கிள்
டே. மேரிக்கிறேஸ்
மணல்காடு,
தாழையடி

2ம் பரிசு
இல. 2800
வானொலி
செம்பியன்பற்று

3ம் பரிசு
இல. 3767
சுவர்க் கடிகாரம்
J. அரசு
நாவாந்துறை

04158


## இரத்தினக்கல் கடத்த முயன்ற காளை கைது

எயர் லங்கா விமானம் மூலம் தாய்லாந்திலிருந்து. 350,000 ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களை களவாக கடத்திச் செல்ல எத்தனித்த 26 வயதுடைய இலங்கை இளைஞர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் சிக்கினார்.

இக் கடத்தல் தொடர்பான விசாரணைகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

## பற் சிகிச்சை நிலையம்

(சங்கானை)

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்திய சாலையில் பற்சிகிச்சை நிலையம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

இதற்கான உபகரணங்கள் இந்தவைத்திய சாலைக்குஅண்மையில் வந்து சேர்ந்துள்ளன.

யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் என் கனகசபை இதற்கான ஒழுங்குகளைச்செய்து வருகின்றார். (13)

கல்வித்துறை அவதானிப்பு

## மேற்பார்வைச் சபை உருவாக்கப்பட்டுள்ளது

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளின் கல்வித்துறை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு தனிச்சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஐந்துபேர் கொண்ட இச் சபைக்கு விஞ்ஞானம், கணிதம், தமிழ், சிங்களம், சமூகக் கல்வி ஆகிய பாடங்களில் பாண்டித்தியம் பெற்றவர்களே உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 8 மாவட்டங்களிலும் பாண்டித்தியம் பெற்றவர்கள் மத்தியிலிருந்தே இத் தெரிவு இடம்பெறும்.

## கடத்தல் முயற்சி இந்திய அதிகாரிகள் தடுப்பு

இந்தியாவிலிருந்து இலங்கையின் வடபகுதிக்கு கடத்த முற்பட்ட 30,000 ரூபா பெறுமதியான கேத்திரகணித உபகரணப் பெட்டிகளை இந்திய சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்

இதேசமயம் இந்திய சுங்க அதிகாரிகளால்மண்டபம்முகாமிற்கு பின்புறமாக பத்தாயிரம் ரூபா பெறுமதியான மிளகாயும், வெங்காயமும் கைப்பற்றப்பட்டது.

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு களவாகக் கடத்திக் கொண்டு வரப்பட்ட 65 000 ரூபா பெறுமதியான கராம்பு சோப்புகளையும் இந்திய சுங்க அதிகாரிகள் கைப்பற்றினார்கள் என செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஊழியர் தொகை மதிப்பீடு சுயவிபரங்கள் சேகரிப்பு

அரசாங்க சேவையிலும் மற்றும் அரசு சார்பான கூட்டுத்தாபனங்களிலும் கடமையாற்றும் சகல ஊழியர்களினதும் தொகை மதிப்பீடு செய்யும் திட்டத்தின் கீழ் யாழ் சுகாதார திணைக்கள ஊழியர்களிடமிருந்து சுய விபரங்கள் யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரினால் கோரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊழியரும் இது தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்ட படிவத்தை நிரப்பி எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் தமது அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியர் திருமணமானவரா? அவரின் அடிப்படைச் சம்பளம், வேலை செய்யும் இடத்திற்கு எப்படி பிரயாணம் செய்வது; கல்வித்தராதரம், பிறந்ததிகதி, இனம், சமயம் போன்ற பல்வேறு விபரங்களை மேற்படி படிவத்தில் ஊழியர்கள் நிரப்பி அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (13)


ஆண் உதவித் தாதியர் பயிற்சிநெறி

TRAINING FOR NURSE - AIDE (MALE)

ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சிநெறி 10.6 1990-ல் ஆரம்பமாகவுள்ளது.

பதிவுகட்கு:

Dr. V. P. சுந்தரராஜன்
சாயிமெடிக்கல் அக்கடமி
இல: 10 பருத்தித்துறை வீதி
யாழ்ப்பாணம்

05159

# பேச்சு என்றால் பேச்சு போர் என்றால் போர்

இலங்கை அரசியலில் ஓர் முக்கிய திருப்பு முனையில் இன்று நிற்கிறோம்.

''பேச்சு என்றால் பேச்சு, போர் என்றால் போர்'' என்று முன்னைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அன்று சூளுரைத்த வண்ணம் இருந்தார்.

இன்றும் அவ்வாறே தலைவர்கள் நினைத்தாலும் வெளிப்படையாகக் கூறாமல் ஓர் பனிப்போர் நடைபெற்றுவருவது தெரிகிறது.

எந்த நேரமும் ஓர் யுத்தம் ஆரப்பமாகலாம் என்ற மன நிலையில் மக்கள் உள்ளதைக் காணமுடிகிறது.

யுத்தம் எங்கே ஆரம்பமாகும் வடக்கிலா. கிழக்கிலா, எல்லையிலா, சென்ரியிலா, உள்ளேயா என பலவித சந்தேகங்களுடன் மக்கள் உள்ளனர்.

இதுவரை காலமும் பேச்சுவார்த்தை என்ற பெயரில் கை குலுக்கிக் கொண்டதெல்லாம் கைகலப்பிற்கு முன் மல் யுத்த வீரர்கள் கைகுலுக்கிக் கொள்வதைப் போலவோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இலங்கை அரசு தமிழ் மக்களை ஏமாற்ற நினைக்கின்றதோ என்ற சந்தேகம் பேச்சு வார்த்தை ஆம்பமான நாள் முதலேயே இருந்து வந்துள்ளது.

அதை நிரூபிக்கும் வகையில் அரசின் செயற்பாடுகள் தொடர்வதை அவதானிக்க முடிகிறது. சிங்களக் குடியேற்றங்கள் இன்னமும் தொடர்கின்றன.

குண்டு வீச்சு விமானங்கள் ரோந்து புரிகின்றன.

முகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன.

மூடப்பட்ட முகாம்கள் மீளத் திறக்கப்படுகின்றன.

கடலில் போர்க்கோலம் காணப்படுகின்றது.

இதுவரை காலமும் இருந்த அமைதியானது ஏற்கனவே இப்பகுதியில் குறிப்பிட்டிருந்ததுபோல் ஓர்மயான அமைதியோ என்று எண்ணும்படி உள்ளது.

மீளவும் ஓர் யுத்தம் ஆரம்பிக்கப்படுமானால்...

முன்னைய சண்டைகளைப் போல் இது இருக்குமா என்பது சந்தேகமே,

யுத்தத்தை நிறுத்தக் கூடிய பந்தானது இன்று இலங்கை அரசின் பக்கமே உள்ளது என்பதை அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்

இந்திய அமைதிப்படை சென்று நான்கு மாதங்கள் முடியப்போகின்றன

அதற்கிடையில் மீளவும் ஓர் யுத்தமா?

இந்திய ஆக்கிரமிப்பானது வடக்கு கிழக்கு மக்களுக்கு மட்டும் உரியதொன்றல்ல

அது இலங்கை முழுவதற்குமே உள்ள ஆக்கிரமிப்பாகும்

ஆனால் அதனை எதிர்க்க சிங்கள அரசோ சிங்கள மக்களோ திராணியற்று இருந்தனர்

தமிழ் மக்கள் மட்டுமே அதனை எதிர்த்து ஆக்கிரமிப்பை நிறுத்தி படையை அனுப்பினர்

இந்த நன்றியை சிங்கள அரசுகள் என்றும் தமிழ் மககள் மீது கொண்டிருக்க வேண்டும் என்பதை எவரும் ஞாபகப்படுத்த வேண்டியதில்லை

இலங்கை அரசிற்குத் தாம் வழங்கியுள்ள இறுதிச் சந்தர்ப்பம் இதுவென்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்

இச்சந்தர்ப்பத்தை இலங்கை அரசு நல்ல விதத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதே தமிழ் மக்களினதும் சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்களினதும் விருப்பமாகும்

## இதயநாதம்

வியாழக்கிழமை 24—05—1990

நலவாக்கு

ஒவ்வொருமேனியிலும், நாளிலும், நொடியிலும் வாழ்வதில் தான் உண்மையான வாழ்க்கையே இருக்கிறது. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற இந்த உண்மையைக் காலம் கடந்து தான் உணர்கிறோம்.

—ஸ்டீபன் லீக்கொக்.

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம

# தமிழ் இளைஞருக்கு இந்தியாவில் இராணுவ பயிற்சி

# ஒரிஸாவிலிருந்து தப்பி வந்தவர் தரும் தகவல்

வடக்கு—கிழக்கிலிருந்து இந்திய இராணுவ வெளியேற்றத்துடன் தப்பிச் சென்ற இயக்க வாலிபர்களுக்கு இந்தியத் தென்மாநில மொன்றில் மீண்டும் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது என்று ஒரிஸாவிலிருந்து தப்பித்துத் திரும்பிய அகதி ஒருவர் தெரிவித்தார்.

இராஜரட்ணம் சதாசிவம் (வயது 34) என்ற இவர் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்தவர். தச்சுத் தொழில் புரியும் இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

திரு.சதாசிவத்தை 'கொண்டல் நிருபர் சந்தித்துப் பேட்டி கண்டார். அவர் கூறியதாவது:— மட்டக்களப்பு—அம்பாறை மாவட்டங்களை விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்த பிற்பாடு கடந்த மாசி மாதம் 2—ந் திகதி திருமலைக்குத் தப்பிச் சென்றேன். அங்கிருந்து பங்குனி மாதம் 7—ம் திகதி ''திப்பு சுல்தான்' கப்பலில் ஒரிஸா புறப்பட்டோருடன் நானும் சென்றிருந்தேன்.

பத்தாம் திகதி காலை ஆறு மணிக்கு விசாகபட்டினத்தில் கொண்டு இறக்கப்பட்டோம். காலைத் தேநீர் தரப்பட்டது. பின்னர் பஸ்களில் இருபத்தைந்து பேர்களாக ஏற்றப்பட்டு ஓரிஸ்ஸாவில் உள்ள மல்கன் கிரி என்ற இடத்துக்குக் கொண்டுவரப்பட்டு, பள்ளிக்கூடம் ஒன்றில் தங்கினோம்.

பொலிஸார் காவல் செய்தனர். அங்குள்ள ஸ்தாபனம் ஒன்று எமக்கு உணவு வழங்கியது. காலையில் உப்புமா வழங்கப்பட்டது. மதிய உணவாகவும், இராச்சாப்பாடாகவும் சோறு, கறி, உப்பு என்பன சேர்ந்த ஒரு துவையலாகக் கிடைத்தது. தேநீர் கிடைப்பதில்லை. ஆனால், குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது.

பாடசாலை இயங்க வேண்டுமென்றபடியால் அங்கிருந்த நாங்கள் ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மற்றொரு கட்டிடத்துக்கு ஏழு நாட்களின் பின்பு இடமாற்றப்பட்டோம். அப்புதிய முகாமில் வைத்து ஒவ்வொருவருக்கும் நூற்றிப்பத்து ரூபா வழங்கப்பட்டது. படம் எடுக்கப்பட்டது. அகதிகள் என்று குறிப்பிட்ட மஞ்சள் நிற அடையாள அட்டையும் விநியோகிக்கப்பட்டது.

அம்முகாமைச் சுற்றியும் பொலிஸ் காவல் இருத்தது. உணவு வழங்கும் ஸ்தாபனப் பிரதிநிதிகள் இருந்தனர். தம்பதிகளுக்குத் தனியறை வழங்கப்பட்டது. எல்லோரையும் மேற்பார்வை செய்ய எம்மிடையே உள்ள ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்.

> **கிழக்கு மாகாணத்தில் வெளிவரும் 'கொண்டல்'பத்திரிகையில் 19.05.90.இல் வெளிவந்த பேட்டிக் கட்டுரை இங்கு மறு பிரசுரம் செய்யப்படுகிறது.**

வெளிக்கதவு காலை ஆறு மணிக்குத் திறந்து மாலை ஏழு மணிக்கு மூடப்படும். இரவில் வெளியே செல்ல முடியாது. அவ்வூரைப் பார்க்க ஆசை வந்தாலும் எமக்குப் பாஷை புரியாததால் புதினத்தை மட்டுமே காணலாம். அகதிகளாகிவிட்ட எங்களை அப் பகுதி மக்கள் கூடி வந்து ''புதினப் பொருளைப்'' பார்ப்பதுபோல் பார்ப்பார்கள். இதுவரைக் கேள்விப்படாத மொழியாக அது இருநதது. மிகவும் சூடான பிரதேசமும் ஆகும். முகாமில் குளிப்பதற்கு மூன்று குழாய்க் கிணறுகள் சரிசெய்து தரப்பட்டது. அருகாமையில் ஓடிக்கொண்டிருந்த வாய்க்கால் தண்ணீரையும் நாங்கள் உபயோகித்தோம்.

அகதிகளாக யாரும் கவனிக்கப்படவில்லை. எல்லோரும் மிருகங்களைப் போலவே நடாத்தப்பட்டோம். இதனால் ஒரு தடவை மூன்று வாலிபர்கள் வெளியேறிப் பிடிபட்டனர். இவர்களுக்கு முகாம் பொறுப்பாளர் தண்டனை வழங்கினார். இன்னொரு தடவை வேறு இரண்டுபேர் முகாமிலிருந்து வெளியேறி பஸ்சில் பயணம் செய்யும்பொழுது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களும் முகாமில் வைத்துத் தண்டிக்கப்பட்டனர். எம்மோடிருந்தவர் அங்கிருந்த பெண்ணை நெருங்க முற்பட்டபொழுது பிடிபட்டுத் தண்டிக்கப்பட்டார். இத்தகைய சம்பவங்கள் நாம் சென்று சில தினங்களிலேயே இடம் பெறத்தொடங்கிள.

ஒருநாள் இரவு 6 மணியளவில் நானும் வெளியேறினேன். இதற்காக முன்னரே திட்டமிட்டபடி என் பையை அவ்வூரைச்சேர்ந்த ஒரு பையன் மூலமாக முகாமுக்கு வெளியே கொண்டுவரச் செய்தேன். பின்னர் பஸ்சில் ஏறி கொஞ்சத்தூரம் சென்று இறங்கினேன் வாகனத்தில் சென்றால் சோதனை மையத்தில் மாட்டிக் கொள்ளக்கூடும் என்பதால், ஒருவரின் ஆலோசனையின் பேரில் பஸ்சிலிருந்து இறங்கி அன்றிரவு முழுவதும் தனிமையில் நடந்து விடியற்காலை இன்னொரு பஸ மூலம் மற்றொரு இடம் சென்றடைந்தேன்.

### ''பிச்சையெடுத்தேன்!''

ஒரிஸ்ஸாவில் பல பகுதிகளிலும் அலைந்து புகையிரதம் மார்க்கமாக மதுரைக்கு வர முடிந்தது. பின்னர் இராமேஸ்வரம் கரையை அடைந்தேன்.

ஒரிஸ்ஸாவிலிருந்து இக்கரையை அடைவதற்கு நடந்தும், வாகனத்திலுமாக ஏறக்குறைய 17 தினங்கள் எனக்குப் பிடித்தது. பாஷை தெரியாமலும், கையில் பணமில்லாமலும் நான்பட்ட அவதி சொல்ல முடியாது. அப்போது தான் எண்ணினேன் ஏன் நாட்டுப் பற்றில்லாதவர்களுடன் சேர்ந்தியங்கினேன் என்று!

ஓர் இடத்தில் எனது மூக்குக் கண்ணாடியையும், மூன்று 'ரீ' சேட்டுக்களையும் விற்றுப் பணம் பெற்றேன். மற்றொரு சந்தர்ப்பத்தில் இரண்டு ரூபா பிச்சை எடுத்தேன். இன்னொரு இடத்தில் பசி தாங்க முடியாது கடையில் கெஞ்சிக் கேட்டுக் கிடைத்ததை உண்டேன். நான் படும் வேதனை போதாதென்று திருச்செந்தூரில் வைத்து கைப் பையும் களவுபோனது.

ஒரு சமயம் வீதியால் களைப்புடன் நடந்து கொண்டிருந்தேன். அப்போது வெள்ளிக் கொலுசு ஒன்று வீதியில் கிடந்து எடுத்தேன். இதனை விற்றுப் பணம் பெறலாம் என்று ஒருவரை நாடிய போது ''திருடிய பொருள்'' என மாட்ட முயற்சி செய்தான் அவன் எனது நிலையை மிகப் பணிவாகக் கூறி அதிலிருந்து ஒருவாறு தப்பிவிட்டேன்.

பின்னர் அதனை எழுபத்தைந்து ரூபாவுக்கு விற்று செலவுக்குப் பயன்படுத்தினேன். காணும் கோயில்களுக்கெல்லாம் சென்றேன். ஆண்டவனை மன்றாடினேன். 'எனக்கு இந்தநிலை போதும்' என்றுதான் இறைவனை வேண்டினேன்.

மதுரையை அடைந்த பிற்பாடு மட்டக்களப்பில் உள்ள என் மனைவிக்கு விபரங்களைக் குறிப்பிட்டு கடிதம் ஒன்றை எழுதினேன். என்னைக் கண்டுபிடித்து கொஞ்சம் பணம் கிடைக்கச் செய்யுங்கள் என்று கடிதத்தில் அழாக்குறையாகக் கேட்டிருந்தேன்.

இராமேஸ்வரத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் காணப்பட்டனர். அவர்களின் உதவியுடன் யாழ்ப்பாணம் வந்தடைந்தேன். அதில் ஒருவர் பணம் தந்தார். தலைமன்னாரிலிருந்து மட்டக்களப்பை ரயில் மூலம் கடந்த புதுவருடத் தினத்தன்று வந்தடைந்தேன்.

இவ்வாறு அவர் பேட்டியில் விபரித்தார்.

நன்றி 'கொண்டல்'

# ஜே. வி. பி. போர்வையில் கொள்ளை; கோஷ்டி சிக்கியது

ஜே. வி. பி. என்ற போர்வையில் கொழும்பிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் சொள்ளையடித்து வந்த கொள்ளைக் கோஷ்டியின் தலைவர் அண்மையில் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

அறுவரைக் கொண்ட இந்த கோஷ்டி சென்ற வருடத்தில் ஜே, வி. பி. குழப்படிகள் உச்சக் கட்டத்தில் இருந்தபோது கொழும்பில் உள்ள பல செல்வந்த வர்த்தகர்களிடமும் இரத்தினக்கல் விற்பனை நிலையத்திலிருந்தும்பல இலட்சக் கணக்கில் கொள்ளையடித்து வந்தனர்.

இக் கோஷ்டியைச் சேர்ந்த நால்வர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார்கள். எஞ்சி உள்ள இருவரும் விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

### அரசாங்க வைத்தியசாலைகளுக்கு

# யாழ். களஞ்சியப் பகுதியினர் நேரடி மருந்து விநியோகம்

(சங்கானை).

யாழ் சுகாதார திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியப் பகுதியினர் இவ்வருட இரண்டாவது கந்தாயத்திற்கான மருந்து வகைகள இப்பிரதேசத்திலுள்ள அரசாங்க வைத்திய சாலைகளுக்கு நேரடியாக கொண்டு சென்று விநியோகம் செய்து வருகின்றனர்.

கடந்த வாரம் சங்கானை அரசினர் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை, அளவெட்டி அரசினர் வைத்தியசாலை, மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை, வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றிற்கு மருந்து வகைகள் விநியோகம் செய்யப்பட்டன.

(13)

# செய்தி மஞ்சரி

## மீண்டும் திறக்கக் கோரிக்கை

திருக்கோவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கி வரும் பொது நூலகத்தின் நூல் இரவல் கொடுக்கும் பகுதி கடந்த சில மாதங்களாக மூடப்பட்டுள்ளது.

இதனை மீண்டும் திறக்குமாறு பொது மக்கள் பிரதேச சபையிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## மக்களுடன் இணைதல் தேவை

''அரச அதிகாரிகள் மக்களுடன் ஒத்துழைத்துப் பொது மக்களின் தேவைகளை நிறைவு செய்யவேண்டும். மக்களுக் காகவே அதிகாரிகள் உள்ளனர். அதிகாரிகளுக்காக மக்கள் என்ற ரீதியில் செயற்படக் கூடாது''.

இவ்வாறு நிந்தவூர் 5ம் பிரிவு அல் மஸ்லம் வித்தியாலய மண்டபத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் நிந்தவூர்ப் பிரிவு அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேடக் கூட்டமொன்றில் உரையாற்றிய தமிழீழ விடு தலைப் புலிகளின் நிந்தவூர்ப் பகுதிப் பொறுப்பாளர் திரு. விக்ரம் தெரிவித்தார்.

## இந்தியப் புலமைப் பரிசில்

இந்தியா இலங்கைக்கு வழங்கியுள்ள 500 உயர் கல்விக் கான புலமைப் பரிசில்கள் இன விகிதாசார அடிப்படை யில் வழங்கப்படும் என்றும் அதற்காக மாணவ மாணவிக ளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதே வேளை இந்தப் புலமைப் பரிசில்கள் மலையக மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கிராமியத் தொழிற்றுறை, உல்லாசப் பயணத்துறை அமைச்சர் திரு. எஸ் தொண்டமான் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து இந்தியா தூதரகப் பேச்சாளர் ஒருவரி டம் வினவியபோது, மாணவ, மாணவிகள் தெரிவு முழுக்க முழுக்க இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்ததென்றும் அவர் கள் சிபார்சு செய்வோரே புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டு இந்தியப் பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று கூறினார்.

## விஞ்ஞான வள நிலையங்கள்

வவுனியா, திருகோணமலை மாவட்டங்களில் விஞ்ஞான வள நிலையங்களை திறப்பதற் கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அம்மாவட்டப் பணிப்பாளர்களை வடக்கு—கிழக்கு கல்வி அமைச்சு கேட் டுள்ளது.

யாழ்ப்பாண, மட்டக்களப்பு மாவட்டங்களில் ஏற்கனவே இந்த விஞ்ஞான வள நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## பதவி உயர்வு

குற்றம் பொது ஒழுங்கு என்பவற்றுக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ் மா அதிபர் திரு. கே. டி. எம். சூரியசிங்க சிரேஷ்ட பொலிஸ் மா அதிபராகப் பதவியுயர்த்தப்படவுள் ளார்.

பிராந்தியங்களுக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ் மா அதிபர் திரு. பிராங்க் சில்வா நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ் மா அதிபர் டபிள்யு' பி. ராஜகுரு ஆகிய இரு வரும் ஏற்கனவே சிரேஷ்ட தரத்தில் உள்ளனர்.

மூன்றாவது வெற்றிடம் திரு. சூரியசிங்காவால் பூர்த்தி யாகிறது.

## கடனுதவிக்கு சிபார்சு

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள முல்லை மேற்கு, முல்லை வடக்கு கிராம சேவையாளர் பகுதிகளில் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கு கட னுதவி வழங்கப்பட வேண்டும் என உதவி அரசாங்க அதிப ரால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

மீன் பிடிப்பு, கருவாடு பதனிடல் மாட்டுப் பண்ணை, தச்சு வேலை என்பவற்றில் ஈடுபடுவோருக்கு தேவைப்படும் உபகரணங்களை வாங்க ஜனசக்தித் திட்டத்தின் கீழ் சுய தொழில் வாய்ப்புக் கடன் பெறுவர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விரைவில் இந்த உதவியை இலங்கை வங்கி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## இறக்குமதி நடவடிக்கை

மிளகாய், வெங்காயத்திற்கு தற்போது நிலவும் பற் றாக் குறையினை நீக்குவதற்கு இந்தியாவிலிருந்தும், பாகிஸ் தானிலிருந்தும் இவை பெருமளவு இறக்குமதி செய்யப்பட வுள்ளன.

500 மெட்ரிக் தொன் செத்தல் மிளகாயினையும் 280 மெட்ரிக் தொன் பெரிய வெங்காயத்தினையும் இந்திய அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திடம் இருந்து கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட் டிருக்கின்றது.

ஒரு மெட்ரிக் தொன் செத்தல் மிளகாயின் விலையை 9155 ரூபாவிற்கு வழங்க இந்திய கூட்டுத்தாபனம் சம் மதித்துள்ளது.

### மலையகத்தவர் கிள்ளுக்கீரை எனும் மனப்போக்கு

# பிரஜாவுரிமைச் சான்றிதழ் வழங்குவதில் இழுத்தடிப்பு

இந்திய வம்சாவளியினரைப் பதிவு செய்யும் திணைக்களம் பிரஜாவுரிமைச் சான்றிதழ் வழங்குவதில் ஏற்படுத்தி வரும் கால தாமதத்தால், இலங்கைப் பிரஜையாக ஏற் றுக் கொள்ளப்பட்டவர்கள் தமது பெயர்களை வாக்கா ளர் இடாப்பில் உட்படுத்திக் கொள்ள முடியாமல் போய் விடுகிறது எனத் தெரிவிக்கப் படுகின்றது.

1988ம் வருடத்தில் நடை முறைப்படுத்தப்பட்ட நாடற் றவர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கும் சட்டத்தின் 4ம்பிரி வின் கீழ் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்த பலரது விண்ணப்பங்கள் ஏற் றுக்கொள்ளப்பட்டன.

ஆனால் இதுவரை இவர்க ளுக்குச் சான்றிதழ் வழங்கப் படவில்லை.

நினைவூட்டிக் கடிதம் எழு தினால் அதற்கு எவ்வித பதி லும் கிடைப்பதில்லை என ஏராளமான விண்ணப்பதா ரர்கள் புகார் செய்கின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் குடும் பத் தலைவனுக்கு மட்டுமே சான்றிதழ் வழங்கப்பட்டுள் ளது.

ஏனைய குடும்ப அங்கத்தி னர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படவில்லை.

திணைக்களம் ஏற்படுத்தி வரும் இப்படியான குழறு படியால் குடும்பத்தில் ஒருசில ருக்குச் சான்றிதழ் கிடைத் தும் வேறு பலருக்குக் கிடைக் காமலும் இருக்கின்றது என்று தெரிவிக்கப் படுகி ன்றது.

## கள்ளச் சிகரெட் தயாரிப்பு நிலையம் திடீர் முற்றுகை

கள்ளச் சிகரெட் தயாரிப்பு நிலையம் ஒன்று தென் னிலங்கையில் முற்றுகையிடப் பட்டுள்ளது. இது பற் றிய விபரம் கேகாலை கலால் இலாகா அதிகாரிகள் கலிகமுவ, ரம்புக்கண, வறக்காப்பொல ஆகிய இடங் களில் இயங்கி வந்த கள்ளச் சிகரெட் தயாரிப்புத் தொழிற்சாலைகளை முற்றுகையிட்டுச் சோதனை நடத்தியதில் பெருந்தொகையான சிகரெட் புகையி லைத் தூள், சிகரெட் மற்றும் கடதாசி, தயாரிப்புக் குப் பயன்படுத்திய இயந்திரம் ஆகியவற்றைக் கைப் பற்றினர். கைப்பற்றப் பட்ட புகையிலைத் தூளின் பெறுமதி நான்கு இலட்சம் ரூபாவுக்கும் கூடுதல் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## இரணைதீவில் முதலுதவி ஆரம்பம்

சென்ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் பயிற்சி வகுப்பை இரணைதீவில் கிளிநொச்சி மாவட்ட முதலுதவிப் படை அதிகாரி எஸ். வீ. சிறிதரன் ஆரம்பித்து வைத்தார்.

இரணைதீவு பாடசாலை அதிபர் மு. எமிலாபிள்ளை உட்பட ஆசிரியர்களும் இதில் கலந்து கொண்டனர். சுமார் 95 மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். (ப. 6)

## கந்தரோடை இளைஞர் கழகம்

(உடுவில்)

ஆரம்ப இளைஞர் கழகம் மொன்று கந்தரோடை இளைஞர் கழகம் எனும் பெய ருடன் ஆரம்பிக்கப்பட்டது.

நிர்வாக சபையின் விபரம் தலைவர்:—க. ராஜ்குமார் செயலாளர்:— இ உஷாதேவி உபதலைவர்:— க. லோகேஸ் வரன் பொருளாளர்:— ந' சித்திரா இதனை விட சங்கத்தின் வளர்ச்சிக்கெனச் சில துணைச் செயற் குழுக் களும் அமைக்கப்பட்டுள்ளன. (ப—2)

### எமது பாதை கரடு முரடாகலாம்

## மக்கள் இணைவு அவசியம் என்று மாத்தயா விளக்கம்

(கோப்பாய்)

''தமிழீழ விடுதலைப் போராட்டமானது இன்று உன்னத நிலையிலேயுள்ளது எமது பாதையின் நீளம் இரு பத்தைந்து மைல்கள் என எடுத்துக் கொண்டால் நாம் கிட்டத்தட்ட இருபது மைலை ஓடிவிட்டோம் ஆனால் இனி ஓடப்போகும் தூரம் கற்கள் முட்கள் நிறைந்த ஒரு கரடு முர டான பாதை இதையோடும் போது சில வேதனைகள் சோ தனைகள் என்பன ஏற்பட லாம் எனவே மனம் தளராது பொது மக்கள் யாவரும் எம்மு டன் ஒன்றிணைய வேண்டும்.

இவ்வாறு கோப்பாயில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் குளிர்பான தொழிற்சா லையை திறந்து வைத்து அங்கு நடைபெற்ற கூட்டத் தில் உரையாற்றிய மக்கள் முன்னணித் தலைவர் மாத் தயா குறிப்பிட்டார்.

மக்கள் நலன் காக்கும் பிரிவு செயலாளர் திரு. க. கணேச லிங்கம் தலைமையில் நடை பெற்ற இக் கூட்டத்தில் மாத் தயா தொடர்ந்து பேசுகை யில் எம்மக்கள் இலட்சிய நோக்கோடும் பொருளாதா ரத்தை வளம் படுத்தும் நோக் கோடும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு கூடிய மதிப் பளிக்க வேண்டும் இத்தொ ழிற்சாலை ஆரம்பிக்கப்பட் டது இலாப நோக்கத்திற் காக மட்டும்மல்ல எமது பிர தேசத்தின் பொருட்களையும் தயாரிப்புகளையும் மக்கள் அறிந்து கொள்வற்கு மாகவே ஆகும்.

வெளியூர்ப் பொருட்களுக்கு எவ்வளவு ஆதரவு வழங்கி குகின்றோமோ அதேய ளவு ஆதரவை எமது உள் ளூர்ப் பெருட்களுக்கும் வழங்க வேண்டும் ''என்றார்.

இங்கு தயாரிக்கும் பணியில் யுவதிகள் ஈடுபட்டுக் கொண் டிருந்தனர். தயாரிக்கும் முறை யை பெருந்தொகையான மக்கள் கண்டுகளித்தனர். (23)

### யாழ். மாவட்டத்தில்

## 10 வருட பணி முடிந்த ஆசிரியர்க்கு இடமாற்றம்

வெளி மாவட்டங்களில் இதுவரை கடமை புரியாது தொடர்ந்து 10 வருடங்களை யாழ். மாவட்டத்தில் பூர்த்தி செய்திருக்கும் 45 வயதுக்கு உட்பட்ட ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களுக்கு இடமாற் றம் செய்யப்படவுள்ளனர்.

அதற்கான ஏற்பாடுகளை வடக்கு— கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

இதற்கான முதல் நடவடிக் கையாக சகல ஆசிரியர்களி னதும் சேவைக்கால விவரங் களை வடக்கு— கிழக்கு மாகாண கல்வி அமைச்சு யாழ். கல்வித் திணைக்களத் திடம் கோரியுள்ளது.

## இடமாற்றம்

(பளை)

பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வீடமைப்பு தொழில் நுட்ப உத்தியோகத்தராக கடமை யாற்றிய எஸ். சிவசுப்பிர மணியம் இடமாற்றம் பெற் றுச் சென்றதையடுத்து மே முதலாம் திகதி தொடக்கம் வீ.எஸ். நற்குணம் வீடமைப்பு தொழில் நுட்ப உத்தியோகத் தராக இடமாற்றம் பெற்று பதவியேற்றுள்ளார். (ப.3)

# கிழக்கில் உல்லாசப் பயணத்துறை புத்துயிரளிக்க நடவடிக்கை

கிழக்கு மாகாணத்தில் உல் லாசப்பயணத்துறைக்கு புத்து யிரளிக்க அரசு நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின் றது.

கடந்த காலங்களில் இடம் பெற்ற சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட உல்லாசப் பய ணத்துறையை மீண்டும் புனர மைப்பதற்கான கடனுதவிக ளையும் ஏனைய நடவடிக்கை களையும் மேற்கொள்ள ஏற் பாடுகள் செய்யப்பட்டு வரு கின்றன.

மத்திய புனர் வாழ்வு அமைச்சு இதற்கான கடனு தவிகளை வழங்கும். நீண்ட கால அடிப்படையில் இக்கட னுதவி வழங்கப்படும்.

வன்செயல்களின் விளை வாக ஐம்பதுக்கும் மேற்பட்ட உல்லாசப்பயண ஹோட்டல் கள் பாதிப்புக்குள்ளாகின.

இதற்கான காப்புறுதி நட்ட ஈட்டினைக்கூட பலர் இது வரை பெறவில்லை என்றும் அறியவந்துள்ளது.

### அரபு பகுதியில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு நீங்கி

# சுதந்திரநாடு மலர தாம் ஆதரவு என்கிறார் பிரேமா

'பலஸ்தீன மக்கள் தங்கள் நியாயமான உரிமைகளைப் பெற எனது அரசாங்கமும், நாடும் தம்மாலான சகலதையும் செய்யும் 'என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ கொழும்பில் தென்கிழக்காசியாவின் மூன்றாவது சர்வதேச இஸ்லாமிய மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

'இதற்காக எனது அரசு யாரிடமும் பிரதிபலனை எதிர்பார்க்காது.நியாயம் எதுவோ அதையே நாம் செய்கிறோம்.' என்றும் அவர் குறிப்பிட்டார்.

'அராபியர்களினதும் முஸ்லிம்களினதும் உணர்வுகளை நான் அறிவேன். அரபு பிரதேசங்களில் இருந்து இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை அகற்றுவதும் பலஸ்தீன நாடு ஒன்றை உருவாக்குவதுமே அவர்களது உணர்வுகளாகும்.

ஐ நா. வின் தீர்மானத்தின் அடிப்படையிலேயே இந்நாட்டில் இருந்து இஸ்ரேலிய நலன்பேணும் பிரிவையும் மூடினோ 'என்றும் ஜனாதிபதி சொன்னார்.

'தர்மத்தீபம் என அழைக்கப்படும் எமது நாடு தர்மத்தையே நாடுகிறது என்றும் குறிப்பிட்டார் அவர்.

### மேலிடத்துக்குப் புகார்

## பழம் வாங்கினால்தான் சீனி மனேஜர் நிர்ப்பந்தமாம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியிலுள்ள ப. நோ.கூ சங்கக்கிளைக் கடை ஒன்றில் கடமையாற்றிவரும் கிளை முகாமையாளரான பெண் ஊழியர் ஒருவர் மக்களின் தேவைகளை உணராதவராகக் கடமை புரிந்து வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

மேலும் அங்கு பொருட்களை வாங்கச் செல்பவர்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைப் பெற முடியாத நிலையில் பெருந் துன்பங்களை எதிர்நோக்கி வருவதாகவும் சொல்லப் படுகிறது.

அது மட்டுமல்லாமல் உணவு முத்திரைகளுக்கான பொருட்கள் சிலவற்றைக் கேட்டால் ஒரு கிலோ வாழைப்பழம் வாங்கினால்தான் அரைக் கிலோ சீனி தர முடியும் என்றும் அடம் பிடிழ்து நிற்கின்றாராம். அது தவறின் சீனி இல்லையெனச் சொல்லப் படுமாம்

மக்களின் நலனுக்காக அமைக்கப்பட்டிருக்கும் சங்கக் கடைகளில் இப்படியான ஒரு நிலையென்றால் மக்கள் எங்குதான் செல்ல முடியுமெனக் கேட்கப்படுகிறது.

இவ்விடயம் பற்றிப் புங் - நயி ப. நோ. கூ சங்கப் பொது முகாமையாளரிடம் புகார்க் கடிதம் கையளிக்கப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (20)

### நல்லூர் கிழக்கிலுள்ள

## பாணான் குள வாய்க்கால் சிமெந்தால் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணத்திலுள்ள பெரிய வாய்க்கால்களில் ஒன்றாகக் கருதப்படும் பாணான் குளம் வாய்க்காலின் ஒரு பிரிவு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை அண்மித்து ஆரம்பித்தால், மழை காலங்களில் இம்மைதானம் வெள்ளத்தால் நிரம்பி வழிகிறது.

மேற்படி வாய்க்காலை சிமெந்தினால் அடித்தளமிட்டு கட்டித் தரும்படி அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அபிவிருத்திச் சபை கடந்த வருடம் மாநகர சபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதுவரையில் அவ்விடயம் சம்பந்தமாக எதுவித நடவடிக்கையையும் யாழ் மாநகர சபை எடுக்காமையால், கூடிய விரைவில் இப்பாலத்தின் இருபக்கத்தையும் கட்டி முடிக்கும்படி கோருவதற்காக மேற்படி அபிவிருத்திச் சபையின் ஐவர் கொண்ட குழு விரைவில் மாநகர ஆணையாளரை சந்திக்கவிருக்கிறது. (47

## விபத்துக்கள்

யாழ்ப்பாணம், நாவலர் வீதியைச் சேர்ந்த பி.மாசிலாமணி(38) என்பவர் மோட்டார் விபத்தில் சிக்குண்டார் இவரது எலும்பு உடைந்து தற்பொழுது போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் பி.ப.3.30 மணியளவில் இடம் பெற்றது. (4)

எஸ்.மதிரா(13) என்பவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி இடுப்பிலும்,இடது காலிலும் பலத்த காயங்களுக்குள்ளாகி தற்பொழுது யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் அரியாலை,தபாற் கட்டைச் சந்தியில் நண்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது. (4)

ரைக்டரில் சென்று கொண்டிருந்து சின்னத்தம்பி சசிகுமார்(13) என்பவர் ரைக்ரரில் இருந்து விழுந்ததால் அவர் மீது சில்லு ஏறி பலத்த காயங்களுடன் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் நண்பகல் 12 மணியளவில் இடம் பெற்றது.(4)

# அலங்காரப் பொருட்களை விடுத்து அரிய நூல்களை அன்பளிப்புச் செய்வோம்

-யாழ் ஜெயம்

அலங்காரப் பொருட்களை அன்பளிப்புச் செய்வதை விட மனிதனின் அறிவினை விருத்தி செய்யும் அரிய நூல்களை அன்பளிக்க நாம் பழகிக் கொள்வோம்.இந்த வகையில் மக்கள் மனதிலும் ஒரு திருப்பம் ஏற்பட யோசப் பாலாவின் 'திருப்பம்' ஒரு திருப்புமுனையாகட்டும்.''

இவ்வாறு யோசப் பாலாவின் 'திருப்பம்' நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை தாங்கி பேசிய யாழ் ஜெயம் தனது தலைமை உரையில் குறிப்பிட்டார்.

இவ் நூல் வெளியீட்டு விழாவிற்கு ஆசியுரை வழங்கிய கில்லறி ஜெபநேசன் அடிகளார் ஆசியுரை வழங்குகையில்''சமுதாய மாற்றத்திற்கு பெரும் பங்களிப்பை இலக்கியம் ஏற்படுத்துகிறது என்பதை மறுக்க முடியாது. இலக்கியம் உணர்ச்சியை ஊட்டவல்ல, மக்களை வழி நடாத்த படைக்கப்பட வேண்டும் வியாபார நோக்கில் படைக்கும் இலகிக்யம் நிலைக்காது.அந்த வகையில் படைக்கும் இலக்கியமும், படைப்பாளியின் வாழ்வும் ஒழுங்கமைந்தாலே அந்த இலக்கியம் மகிமை பெறும் என்றார்.

வெளியீட்டுரை அளித்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர் டிவகலாலா குறிப்பிடுகையில்; அரச வேலைகள் சூழ் நிலை சரியில்லை என்று சும்மா இருந்த வேளையில் வழமையிலும் பார்க்க சூடு பிடித்து வந்தது எமது இலக்கியம் ஒன்றேதான்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ் மாநகர ஆணையாளர் திரு.வே. பாலசிங்கம் பேசுகையில், எழுத்தாளன் சமுதாயத்தை முன்னேற்றும் நோக்கோடு தரமான படைப்புகளைவெளியிட்டும் அவை பரவலாக் சென்றடையா விட்டால் அவர்களின் படைப்புகள் ஒரு வட்டத்திற்குள் அடங்கி விடும்.ஆகவே இவை பரவலாக்கப்பட வேண்டும். அதற்கு மக்கள் மத்தியில் இயங்கி வரும் சனசமூக நிலையங்கள் மூலம் நூல்கள் அறிமுகப் படுத்தப் படல் வேண்டும் என்றார்.அருட்திரு சவரிமுத்தடிகள் கருத்துரை தெரிவிக்கையில், இலக்கியம் சமயத்திற்கு அப்பாற்பட்டது. அதற்கு உரிமை கோரி தமதாக்கிக் கொள்ள எவருக்கும் உரிமை இல்லை. இலக்கியம் ஒரு பகுதிக்கு மட்டும் சொந்தமில்லை.நாம் தமிழர் என்ற நினைவுடன் செயல்பட வேண்டும்.மதரீதியில்எல்லைக் கோடுகளைபோட்டு அடக்கக் கூடாது என்றார்.

திரு.செங்கை ஆழியன் பேசுகையில் 'இலக்கிய களத்தில் ஆழமாக காலைப் பதித்து விட்டார் யோசப் பாலா என்பதற்கு இத்'திருப்பம்' ஓர் சான்று- சொற்சிக்கனத்துடன்,தேவையற்ற வர்ணனைகளை தவிர்த்து கதையை நகர்த்திச் செல்லும் ஆசிரியரின் அவதானிப்புக்கள் அதனைப் படைப்பதுடன் நின்று விடாது ஒழுக்கம்,வாழ்வும் சமநிலைத் தன்மை கொண்டு இரக்கத்தோடு பார்க்கும் சிந்தை ஜோசப்பாலாவின்வெற்றியின் ரகசியம் என நினைக்கிறேன்' என்றார். இவ் விழாவின் போது வளன்புர சனசமூக நிலையத் தலைவர் உட்பட வேறு பலரும் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வழங்கினார்கள்.

# விளையாட்டுச் செய்திகள்

## யாழ்.மாவட்டப் போட்டி

(தாளையடி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கழகங்களுக் கிடையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற வீரர்கள் வீராங்கனைகள் யாழ்ப்பாண மாவட்டப் போட்டிகளில் பங்குபற்றலாம் என யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு அதிகாரி அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 26-ம் 27- ம் திகதிகளில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன. (18

## மட்டக்களப்பு- குருநகர் மோதல்; முடிவு சரிசமம்

(விளையாட்டுத்துறை நிருபர்)

குருநகர் பாடுமீன் வினையாட்டுக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு மட்டக்களப்பு பாடுமீன் விளையாட்டுக் கழக 'A' பிரிவு அணிக்கும், குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக 'A' பிரிவு அணிக்கும் இடையில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோலை மாத்திரம் போட்டதனால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி ட்றோவில் முடிவடைந்தது

ஆட்டம் ஆரம்பமாகி 12-வது நிமிடத்தில் மட்டக்களப்பு அணி விரன் எஸ் யூலியன் யோசவ் வெகுசாதுரியமாக ஆடி.ஒரு கோலைப் போட்டார்.

அதன் பின் கோல் போடக் கூடிய பல வாய்ப்புகள் மட்டக்களப்பு அணியினருக்கு கிடைத்தும் அதனை அவர்கள சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

அதே சமயம் 25 வது நிமிடத்தில் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை சாதகமாக்கி குருநகர் அணி வீரன் பீ. துரை ஒரு கோலைப் போட்டு அணிகளின் நிலையை சமப்படுத்திக்கொண்டார்.

அதன் பின் இரு அணி விரர்களின் ஆட்ட வேகம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த பொழுதிலும் இரு அணி ''டிவென்ஸ்'' வீரர்கள் திறம்பட செயற்பட்டமையினால் கோல் எதையும் இரு அணிகளாலும் போடமுடியவில்லை.

ஏராளமான மக்கள் கண்டுகளித்த இப்போட்டியை கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம், திரு. ஏ. தேவராசா ஆகியோரின் உதவியுடன் திரு. கிளிபேட் அந்தோணிப்பிள்ளை மெச்சத்தக்க விதத்தில் கட்டுப்படுத்தினார்.

ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்பாக திரு.யேசுதாசன் பிரதம விருந்தினர் கலாநிதி யே. பி. சி. பிலிப்ஸுக்கு இருஅணி வீரர்களையும் அறிமுகம் செய்து வைத்தார்.

இப்போட்டிக்கு முதல் நடந்த 'B' பிரிவு அணிப் போட்டியில் மட்டக்களப்பு அணி 2 க்குபூச்சியம் என்ற கோல்கள் கணக்கில் குருநகர் அணியை தோற்கடித்தது,

நடுவராக ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை அவர்களும் உதவி நடுவர்களாக பீ.ஆர். தம்பிநாயகமும் எஸ்.றோபேட்டும் கடமையாற்றினார்கள்.

அறிலிப்பாளராக கடமையாற்றிய பி. யேசுதாசன் ஈற்றில் நன்றியுரையும் வழங்கினார். (16)

## மத்தியஸ்தர் பயிற்சி முகாம்

(விளையாட்டுத்துறை நிருபர்)

1989 ஆம் ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்த உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் ஒன்று, விளையாட்டுத்துறை அமைச்சில் கடந்த வாரம் இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்பட்டது இலங்கையின் சகல பாகங்களின் இருந்தும் 50 க்கும் மேற்பட்ட மத்தியஸ்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

அகில இலங்கை உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திரு. T. பேரின்பனாயகம் உபதலைவர் திரு. A. S குணரெட்டினம். லெப்ரினன் கேணல் C. S பெர்னான்டோ ஆகிய அனுபவமும் ஆற்றலும் மிக்க உதைபந்தாட்டத்துறை வல்லுனர்கள், செய்முறைகளையும் விரிவுரைகளையும் நடத்தினார்கள் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளில் பயிற்சி முகாம் ஒன்று நடைபெற்றது. இலங்கை உதைபந்தாட்ட வரலாற்றில் இதுவே முதல்தடவை என்பது இங்கே சுட்டிக் காட்டப்படவேண்டிய தொன்றாகும்.

மேலும தற்பொழுது இலங்கையில் தங்கி நிற்கும் சர்வதேச மத்தியஸ்தர்களான 'மூசீன் அரிப் ஜாபா' நிமல் விக்கிரம, சிங்க ஆகியோரும் இப்பயிற்சி முகாமில் கலந்துகொண்டு அறிவுரைகள் வழங்கினார்கள். ஆரம்பவைபத்தில் 'குறூப் கப்ரின்' பணன்வேல, (செயலாளர் இலங்கை உதைப்பந்தாட்ட சங்கம் அவர்களும்) விசேட விருந்தினராக கிழக்கு ஜேர்மன் உதைபந்தாட்ட பயிற்றுனர் 'பெக்காட் சீஸ்' அவர்களும் கலந்து கொண்டார்கள்.

ஈற்றில் திரு. ஏ. எஸ். குணரெட்டினம் தலைமையில் நடைபெற்ற நிறைவு விழாவில் இப்பயிற்சி முகாமில் கலந்துகொண்ட மத்தியஸ்தர்கட்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராகதிரு. அபேயசிங்கா கலந்து கொண்டார். (16)

## கரப்பந்தாட்டசுற்றுப்போட்டி

மட்ளக்களப்பு கோட்டமுனை வை. எம், சீ. யின் ஆதரவுடன் மட்டக்களப்பு மோசாப்பிட்டி இளைஞர் விளையாட்டுக்கழகம் அதன் பத்தாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நான்கு பேர் கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றினையும், கலாசார விழா ஒன்றினையும் நடத்தியது

இதில் கல்லடி ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் சம்பியனாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

இவ்விளையாட்டில் 25 குழுக்கள் பங்குபற்றின. (05)

## முரசொலிக்கு வந்த கடிதம்

### பொறுப்புள்ளவர்கள் விழிகள் திறக்குமா?

ஆசிரியர்
முரசொலி

நெல்லியடி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமத்தில் தற்பொழுது அநாதைகள் 79 பேரும், வயோதிபர்கள் 24 பேருமாக மொத்தம் 103 பேர் தங்கி வாழ்கிறார்கள். ஆனால் இவ் ஆச்சிரமத்தில் போதியளவு வருமானம் கிடைக்காத பட்சத்திலும் தலைவர் சுவாமி பரமானந்தா அவர்கள் ஏதோ ஒரு வகையில் தன்னையும் அர்ப்பணித்தவாறு கட்டிக் காத்து வருகிறார்.

இது ஒரு புறம் இருக்க இந்த அநாதைப் பிள்ளைகளுக்குச் சுகாதாரப் பகுதியினரின் ஆலோசனையுடன் அமைக்கப்பட்டுப் பாவனையிலிருந்து வந்த மலசல கூடத்தை அருகில் உள்ள வீட்டுக்காரர் தனது சுய தேவையின் பொருட்டு அந்த மலசல கூடத்தை இடிக்குமாறும், இந்த ஆச்சிரமத்திற்கென உள்ள கிணற்றினை மூடுமாறும் அசட்டைத் தனம் செய்து வருகிறார்கள்.

பல அநாதைப் பிள்ளைகளின் பாவனைக்கென உள்ள இக் கட்டிடங்களை ஒரு தனி நபருக்காக இடித்துக் கொட்டுவது நியாயமானதா? இக் கேள்வியானது அயல் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தினை ஏற்படுத்தி உள்ளது. தற்பொழுது சுவாமி பரமானந்தா (வயது 80) அவர்கள் சுகயீனத்திற்குள்ளாகி இருக்கிறார். அத்துடன் இந்த ஆச்சிரமத்தில் தங்கி வாழும் அநாதைப்பிள்ளைகள், வயோதிபர்கள், பாதிக்கப்படாமல் இருக்க இதற்குப் பொறுப்பான சபையினர் நடவடிக்கை எடுப்பார்களா?

புலோலியூர் V .S. பிறேம்ராஜ்

### சீருடை சீர்தரும் நடைமுறைக்கு வருமா?

ஆசிரியர்,
முரசொலி.

ஆசிரியர் ஆசிரியைகள் பாடசாலைக்குச் செல்லும் பொழுது சீர் உடை அணிந்து செல்வது சீரும் சிறப்பும் உடையதாக இருக்கும் என்று எண்ண வைக்கின்றது. இன்றைய ஆசிரிய, ஆசிரியைகளின் உடை அலங்காரங்கள்.

மாணவர்களின் மத்தியில் மதிப்பையும் மக்களின் கணிப்பையும் பெறுவதற்கும் ஆசிரியத் தொழிலின் புனிதத்தைப் பேணுவதற்கும் சீருடை உதவி செய்யும்.

கையில் கொண்டு செல்லும் புத்தகப்பையும் இல்லாவிடில் எங்கோ களியாட்ட விழாவிற்குச் செல்லும் கணிகையர் காளையர் போலச் செல்வது இளந்தலைமுறையினரைப் பாதிப்படையச் செய்துவிடும். வெள்ளைக் கலையுடுத்தி தங்கள் சேவைத் திறத்தினால் குழந்தை உள்ளங்களை மாசுபடுத்தாமல் இருக்க இது அவசியமாகிறது.

கரவெட்டி கா. கணபதிப்பிள்ளை

## கண்டாவளை அரசினர் வித்தியாலய நிலை மேம்பாடு

(பரந்தன்)

கண்டாவளை அரசினர் வித்தியாலய தளபாடத் தேவையின் ஐந்து வீதம் இவ் வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும். மேலும் இப் பாடசாலையில் அமைத்துள்ள தரமான நூல் நிலையத்திற்குத் தளபாடங்களைக் கொள்வனவு செய்ய ரூபா ஐம்பதினாயிரம் ஒதுக்கப்பட்டது.

இது கஷ்டப் பிதேசத்தில் அமைந்துள்ள பாடசாலையாக இருந்தும் இதன் வளர்ச்சியும் இங்குள்ள பெற்றோர் பாடசாலையின் வளர்ச்சியில் காட்டும் அக்கறையும் எமது திணைக்களத்திற்கு பெரு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கல்வி அதிகாரி திரு. பொன் சபாபதி தெரிவித்தார்.

கண்டாவளை அரசினர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் க. வைரமுத்து தலைமையில் இடம் பெற்ற இவ் வைபவத்தில் விவசாயக் கல்வி அதிகாரி' திரு. சு. தர்மரட்ணம் முரசுமோட்டை கொத்தணி அதிபர் திரு. யோ. அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இப்போட்டியில் நாவலர் இல்லம் முதலாம் இடத்தையும் விவேகானந்தர் இல்லம் இரண்டாம் இடத்தையும் விபுலானந்தர் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன (54)

## பழந்தமிழர் நகரம் சிங்களவர் வசமாக விடுவதா?

-வாஞ்சி

''நான்கு பக்கங்களில் கங்கை நதியும், நீரோடைகளும் பாய்ந்து கொண்டிருக்கும் இந்தக் கங்குவேலிக் கிராமத்தில் தமிழ்க் குடும்பங்கள் 400 வசிக்கின்றன. மிகவும் சிறிய தொகையாயிருந்தாலும், இந்தக் கிராமத்து மக்களின் வாழ்க்கைத்தரம், நீரோடைகளின் குளிர்மையைப் போன்று சிறப்பானதாக அமையவில்லையே... ஏன்? என்பதை ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்''.

இவ்வாறு மூதூர்ப் பிரதேசம், கங்குவேலியில் நடைபெற்ற வி. பு. மக்கள் முன்னணியின் கூட்டத்தில் பேசும்போது முன்னணியின் முக்கியஸ்தரும், கவிஞருமான திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:—

''காலங் காலமாக இந்தத் திருகோணமலை மாவட்டம் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. குளக்கோட்டன் என்ற பழம்பெரும் அரசனால் கட்டுவிக்கப்பட்ட கந்தளாய்க் குளமும், தம்பலகமம் கோணேஸ்வரர் கோயிலும், கங்குவேலி சிவன்கோயிலும்... திருகோணமலையைப் பற்றி திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட திருகோணமலைப் பதிகமும், இராவணனால் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் கன்னியா வெந்நீர்க் கிணறுகளும் .. இந்த மண்ணின் தமிழ்க் கலாசாரங்களாக நிற்பதை அறிந்திருந்தும் இந்த மண்ணைச் சிங்கள அரசு தன் சதிவலைக்குள் வீழ்த்தத் திட்டம் தீட்டியிருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இந்தச் சதிவலையை அறுத்து, எமது பாரம்பரிய பூமியை மீட்பதற்காக நாம் அரசுடன் பேசுவோம்... முடியா விட்டால் போராடுவோம். இந்தப் போராட்டத்தில் எமது வி. பு. மக்கள் முன்னணியுடன் சகல தமிழ் பேசும் மக்களும் இணைந்து போராட முன்வர வேண்டுமென்று அன்புடன் வேண்டுகின்றேன்'' இவ்வாறு அவர் கூறினார்.

## வட்டு, வைத்தியசாலைக்கு 12 வருடத்தின் பின் வர்ணம்

(சங்கானை)

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியாசலையில் கிடந்த 12 வருடங்களுக்குப் பின்பு கட்டிடச் சுவர்களுக்கு வர்ணம் சிரமதான மூலம் பூசப்பட்டு தற்போது புதுமெருடன் வைத்தியசாலை காட்சியளிக்கின்றது.

யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை திணைக்கள நிதியிலிருந்து அண்மையில் வழங்கிய பத்தாயிரம் ரூபா நிதியைக் கொண்டு வர்ண வகைகள் வழங்கப்பட்டன.

வார்ட்டுகளில் நோயாளர் உபயோகிக்கும் சகல கட்டில்களுக்கும் வாங்குகளுக்கும் தீந்தைகள் பூசப்பட்டுள்ளன. யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தினரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் குழுவினரும் வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியழர்களுடன் இணைந்து வர்ண வேலையைச் சிரமதான மூலம் மேற்கொண்டனர்.(13)

## இளவாலை பிள்ளயார் ஆலய கும்பாபிஷேகம் கருதி பெரும் எடுப்பில் சிரமதானம்

(இளாவாலை)

இளாவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோயிலில் அடுத்தமாத முற்பகுதியில் நடைபெறவுள்ள கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இளாவாலை வடக்கு வெண்புறா இளைஞர் கழகத்தினர் பாரிய சிரமதானம் ஒன்றை மேற்கொண்டார்கள்.

வரலாற்றுப் பெருமைமிக்க இவ்வாலயம் புதுப்பொலிவுடன் கும்பாபிஷேகம் காணவுள்ளது.

கும்பாபிஷேகம் முடிந்து மூன்றாண்டுகளுக்குள் இந்த ஆலயத்தில் கொடிஸ்தம்பம் நாட்டி மகோற்சவம் செய்வதாக அவ்வூர் மக்களால் முடிவுசெய்யப்பட்டுள்ளது.(25

### கோழிக்குஞ்சு வழங்கல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கால்நடை, வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டவர்களுக்கு நல்லின கோழிக் குஞ்சுகள் எதிர் வரும் 2ம் 3ம் திகதிகளில் வழங்கப்படுமெனவும் நல்லின கோழிக் குஞ்சுகள் குண்டகசாலையிலிருந்து கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது (15)

### மக்கள் அல்லல் அகலுமா?

(பருத்தித்துறை)

நீண்டகாலமாகக் கவனிப்பாரற்று குன்றுகள், குழிகளுடன் காணப்படும் பருத்தித்துறை கரையோர வீதியைத் திருத்திப் புனரமைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு வீதிகள் அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரை இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

இவ்வீதி திருத்தப்படாமையினால் இவ் வீதியில் அடிக்கடி பயங்கர விபத்துக்கள் இடம் பெறுவதால் மக்கள் பெரும் அல்லல்களை அனுபவித்து வருகின்றனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (15

## நிதிப்பற்றாக்குறை?

நல்லூர் உதவி அரசஅதிபர் பிரிவைச் சேர்ந்த வருமானம் மிகக் குறைந்த, வசதியற்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற பொதுசன மாதாந்த உதவிப் பணம் இம்மாதம் குறைத்து வழங்கப்பட்டுள்ளது.

இது விடயமாக அறிந்து கொள்வதற்குச் சென்ற மேற்படி பணத்தைப் பெறுபவர்களுக்கு யாழ். 'அரச செயலக சமூக சேவைப் பகுதியிலிருந்து ஒதுக்கீடு செய்து அனுப்பப்பட்ட நிதிப்பற்றாக்குறை காரணமாகவே இக்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

யாழ். செயலக சமூக சேவைப் [பகுதியில் மேற்படி விடயமாக விசாரித்த போது, வடக்கு கிழக்கு மாகாணசபை மேற்குறிப்பிட்ட கொடுப்பனவுக்கென்று ஒதுக்கீடு செய்து அனுப்புகின்ற தொகையை, இம் மாவட்டத்திலுள்ள 14 உ.அ. அதிபர் பிரிவுகளுக்கும் பிரிக்கின்றபோது எல்லா உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கும் இப்பற்றாக்குறை ஏற்படுகின்றது.

எனவே வடக்கு, கிழக்கு மாகாண அரசு மேற்படி கொடுப்பனவுக்கென்று கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்யாத நிலையில் இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (43)

## சுவையான செய்திகள்

### மனைவிக்கும் சகிக்கவில்லை

வொரால்டு ராபின்சன் போலபுகழ்பெற்ற செக்ஸ் எழுத்தாளர் ஆர்ட்டிச் வார்டு என்பவர். இவர் புகழ்பெற்ற ஆபாச ஆங்கிலப் பத்திரிகையான ''பிளேபாய்'' பத்திரிகையில் ஒரு கதை எழுதியிருந்தார்.

அந்தக் சுதை படு ஆபாசமாக இருப்பதாகக் கூறிச் சிலர் அநதப் பத்திரிகைக்குத் தாங்கள் கட்டி வந்த சந்தாவை நிறுத்தி விட்டார்கள். அவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர் ஆர்ட்டிச்வால்டின் மனைவி!

### வேகத்தில் சளைக்கவில்லை

உலகத்திலேயே அதிவேகமாக சக்கர நாற்காலியில் போகக் கூடியவர் அமெரிக்காவைச் சேர்ந்த கிரேக் பிலான் கிலாடி என்பவர் 21 வயதான இவருக்குப் பிறந்ததிலிருந்தே இரு கால்களும் கிடையாது.

### கவலை வேண்டாம்

உங்கள் கையெழுத்து மோசமாக இருந்தால் கவலைப்படாதீர்கள, நெப்போலியனின் கையெழுத்துக் கூட ஒரே கிறுக்கலாகத்தான் இருக்கும். நெப்போலியனின் சில கடிதங்கள் திருடப்பட்டன. அவை திருடப்பட்டதற்குக் காரணம் அவற்றில் உள்ள விஷயங்கள் அல்ல. அவர் எழுத்து போர்க்களங்களை வரைபடமாக வரைந்து இருக்கிறார் என்ற தவறான எண்ணத்தை ஏற்படுத்தியதே காரணமாம்.

### அவரது சுபாவம்

கதாசிரியர்களுக்கும், கவிஞர்களுக்கும் எழுதும் போது ஒவ்வொரு வழக்கம் இருக்கும் என்பது தெரிந்ததே, ஈஜெனி வீல்டு ஓர் அமெரிக்க கவிஞர், அவர் கவிதை எழுதத் தொடங்கும் போதெல்லாம் நாற்காலியில் அமர்ந்து சுவரில் ஆணி அறைந்து பொருத்தப்பட்ட பூட்ஸ்களில் காலை நுழைத்தவாறே எழுதுவார், அப்போதுதான் அவருக்கு எளிதாகக் கவிதைகள் எழுத வருமாம்,

# இன்று நாள் எப்படி?

மேடம்: பணவரவு, வாகன இலாபம், வணிகர்கள் கடற்தொழில் இயந்திரத் தொழில் செய்வோர் இலாபம், சுகஜீவியம்.

இடபம்: வாகன இலாபம், வணிகர்கள் சமபலன், கல்வியால் தொழில், பிரிந்தவர்கள் ஒன்று சேருவர்.

மிதுனம்: வீண் விரையம், இனப் பகை, இடமாற்றம், புதுத்தொழில், தெய்வ வழிபாடு.

கடகம்: இளைய சகோதர வழியுதவி, வாகன சுகம், வணிகர்கள் சமபலன், கலைஞர்கள் புகழ்.

சிங்கம்: பிரிந்தவர்கள் ஒன்று சேருவர் உயர் பதவி, உத்தமர் உறவு, வாகன இலாபம், பணவரவு.

கன்னி: பிதாவழி சுகம், பெரியோராசி, புகழ் தேடிவரும், புதுமனை சேருதல், திடீர்ப் பிரயாணம்.

துலாம்: வாக்குப் பலிதம், வணிகர்கள் கடற் தொழில் செய்வோர் இலாபம், விவாக நிச்சயம்.

விருச்சிகம்: விவாக நிச்சயம், பெரியோராசி, எண்ணியது நடக்கும், மூத்த சகோதர வழி உதவி.

தனுசு: புகழ் தேடிவரும், புண்ணிய வழிபாடு, தூரதேசம் போனவர் வருகை, மாமன் வழி உதவி.

மகரம்: புத்திர சுகம், புகழ் தேடி வரும், வாகன மாற்றம், உயர் பதவி, உத்தமர் உறவு.

கும்பம்: வாக்குப் பலிதம், சகோதர வழி உதவி, வாகனச் சேர்க்கை, மாமன் வழி உதவி.

மீனம்: சுகஜீவியம், வாக்குப் பலிதம், வணிகர்கள் இலாபம், தேடியவர் வருகை, கலைஞர்கள் கௌரவிக்கப்படல்.

யாழ். சோதிடர்

ச. அரியநாயகம்

## ஹரியானா முதலமைச்சர்

# மேலிட கோரிக்கையால் பதவி விலகிவிட்டார்

ஹரியானாவின் முதலமைச்சர் திரு. ஓம் பிரகாஷ் சௌத்தலா நேற்று பதவி விலகிவிட்டார்.

ஜனதாதள்களின் காரியக் கமிட்டி கேட்டுக்கொண்டதற்காகவே அவர் தன் பதவியை ராஜினாமாச் செய்தார்.

இக்காரியக்கமிட்டிக் கூட்டத்தில் பிரதமர் திரு. வி. பி. சிங் உட்பட பல தலைவர்களும் கலந்துகொண்டனர். துணைப் பிரதமர் திரு. தேவிலால் கலந்து கொள்ளவில்லை.

திரு. சௌத்தலா திரு. தேவிலாலின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்கு எதிராக பல புகார்கள் மேலிடத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருந்ததன் எதிரொலியே இந்த நடவடிக்கை ஆகும்.

# வட்டு. இந்து வாலிபர் சங்கம் புரிந்த மெச்சத்தகு உதவி

வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கம் வட்டுக்கோட்டைத் திருஞானசம்பந்தர் வித்தியாலத்தில் துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் ஒன்றை அன்பளிப்பாக நிறுவிக் கொடுத்துள்ளது.

வித்தியாலய அதிபர் திரு. எஸ்.சிவவாசீகர் இதற்காக மேற்படி சங்கத்திற்குப் பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளார். (13)

## முயற்சி துரிதம்

# கல்வி அபிவிருத்தி;வலிகாமம் மேற்கில் ஆலோசனைச் சபை!

(சங்கானை)

வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை ஆகிய இரு தொகுதிகளைச் சேர்ந்த கல்விமான்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள், பல்கலைக்கழக 'விரிவுரையாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ''கல்வி அபிவிருத்தி ஆலோசனைச் சபை'' ஒன்று பண்டத்தரிப்பு கோட்டைக் கல்வி அலுவலகத்திற்கென அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

இப் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்கான ஆலோசனைகளை இச் சபை அவ்வப்போது பண்டத்தரிப்பு கோட்ட உதவி கல்விப் பணிப்பாளருக்கு வழங்குமென்று இதுபற்றித் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சபையின் அங்குரார்ப்பணக்கூட்டம் ஜூன் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (13)

## சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவு

# சனத்தொகை கூடுதலால் இரண்டாக்கக் கோரிக்கை

(சங்கானை)

'சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சனத்தொகை அதிகரிப்பு காணப்படுவதால் இதை இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக பிரிக்க வேண்டும். என்ற தீர்மானம் அண்மையில் நடைபெற்ற சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜத்தின் செயற்குழுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சமாஜத் தலைவர் திரு. வி. செகராஜசிங்கம் தலைமையில் சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பகுதி, பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக பகுதி ஆகிய இரண்டையும் சேர்த்து ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும், மானிப்பாய் பட்டின உப அலுவலகம் பகுதி மானிப்பாய் கிராம உப அலுவலகப் பகுதி ஆகிய இருபகுதிகளையும் ஒன்றாக இணைத்து தனியானதொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும் இயங்குவதற்கு ஆவன செய்யப்பட வேண்டும் என்று யாழ் மாவட்ட அரசாங்க அதிபரை கேட்டுக் கொள்வது என்று இத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சில கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் சரியான முறையில் வழங்கப்படவில்லை என்றும், பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் வகையில் இது பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற தீர்மானம் உட்பட பல தீர்மானங்கள் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# காக்கையன் குளத்தில் விளையாட்டுப்போட்டி

காக்கையன் குளம் அறபாத் விளையாட்டுக் கழகம் நடாத்தும் ஒன்பதாவது விளையாட்டுப்போட்டியும் கலை நிகழ்ச்சியும் எதிர்வரும் 26ம்-27ம் திகதிகளில் காக்கையன்குளம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வன்னி மாவட்டங்களுக்கிடையிலான 4 பேர் கொண்ட 30 நிமிட கரப்பந்தாட்டப் போட்டி சனிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

வன்னி மாவட்டக்களுக்கிடையிலான 65 மைல் மரதன், சைக்கில் ஓட்டம், 5 மைல் மரதன் சைக்கிள் ஓட்டம் (பெண்கள் சகலரும்)3 மைல் மரதன் கால் ஓட்டம் (ஆண்கள் சகலரும்) என்பன ஞாயிறு காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

மைதான நிகழ்ச்சிகளாக சங்கீதக்கதிரை, சைக்கிள் சங்கீதக் கதிரை, முட்டி பாதுகாத்தல், சுருட்டு பற்ற வைத்தல், 100மீற்றர் கால் ஓட்டம் தடைதாண்டி ஓட்டம், 4×100 அஞ்சல் ஓட்டம் (கழகங்கள்) 4×200 அஞ்சல் ஓட்டம், 4×400 அஞ்சல் ஓட்டம் கலப்பஞ்சல் டபிள் ரேஸ், சறுக்கு மரம், கண்டு பிடியுங்கள் என்பன இடம் பெறும்.

இரவு நிகழ்ச்சிகளாக, அறிவுக் களஞ்சியம், 1 நிமிடம் பேசுதல், 7 கேள்விகள், பொது அறிவுப் போட்டி. வெல்ல முடிந்தால் வெல்லுங்கள, வசந்த ராகங்கள் என்பன நடைபெறவுள்ளன.

# இங்கும் சேவை கிடைக்கும்

(நாவற்குழி)


மந்திகை அரசினர் வைத்திய சாலையில் கடமையிலீடுபட்டிருக்கும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த எம். எஸ். எப் வைத்தியக் குழு இம் மாதம் 24 ந் திகதி முதல் ஒவ்வொரு வியாழக் கிழமைகளிலும் சாவகச்சேரி வைத்திய சாலையிலும் சேவையிலீடுபடுவர்


தென்மராட்சி நோயாளர் நலன் புரிச் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கையினால் சாவகச்சேரிக்கு வர இருக்கும் இந் நிபுணர் குழு இங்கு சிறிய சத்திர சிகிசசைகளை மேற்கொள்ளும் எனவும். இது தென்மராட்சி மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் எனவும் நோயாளர் நலன் புரிச் சங்க செயலாளர் தெரிவித்தார். (ப. 5)

# எங்கோசெல்கிறது

உள்ளூராட்சித் திணைக்களத்தினால் சனசமூக நிலையங்களுக்கு வழங்குவதற்காக அனுப்பப்பட்டு வரும் நன்கொடைப் பணம் உள்ளூராட்சி மன்றங்களினால் சனசமூக நிலையங்களுக்கு ஒழுங்காக வழங் கப் படுவது இல்லை என்று புகார்கள் செய்யப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா அறிவித்துள்ளார்.

இந் நன் கொடைப் பணத்தை உடனுக்குடன் சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அவர் மாநகர ஆணையாளர், பிரதேச சபைகள், நகர சபைகளின் விசேட ஆணையாளர்களைக் கோரியுள்ளார். (36,





வல்வை முத்து மாரியம்மன் தீர்த்த உற்சவ இந்திர விழாவின் போது எடுக்கப்பட்ட படங்களை இங்கே காண்கிறீர்கள்.

கண்ணன் உருவ முகப்பு வளையம், 100 அடி உயர நடமாடும் பெண் ஆகியவற்றின் காட்சியையும் வல்வை ஊறணி தீர்த்தக்கரையில் முத்துமாரி அம்மன் தீர்த்தமாடுவதையும் படத்தில் காணலாம். (படம்- உடுப்பிட்டி நிருபர்)

# யாழ்ப்பாண பிராந்திய சுகாதார பணிமனை

# ஊழியர் அவல நிலை

யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனைக்கென்று ஒரு நிரந்தர கட்டிடம் இல்லாததால் ஊழியர்கள் பெருமளவு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

1986 ம் ஆண்டு வரை நிரந்தரமாக இருந்து வந்த ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பணிமனையானது. ஸ்ரீலங்கா இரணுவத்தினரால் இடித்து நாசமாக்கப்பட்டது. பின் தகுந்த இடம் இல்லாமையால் தாதிமார் பயிற்சிக் கல்லூரியில் சிறிது காலமும், பின் இணுவில் ஆஸ்பத்திரியில் சிறிது காலம் இயங்கி, தற்பொழுது, வேறு இடத்தில் இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றது.

தற்போதுள்ள இக்கட்டிடத்தில், போதிய வசதியில்லாமையால் எழுது வினைஞர்கள் வெளி விறாந்தைகளில் கடமை புரிவதுடன், அவ்விடங்களில் உள்ள மேசைகள், கதிரைகள் மற்றும் சுற்றறிக்கைகள், கோவைகள், பிரதானமான சாதனங்கள் என்பன பேணிப் பாதுகாக்க முடியாமல் இருக்கின்றன.

உயர் அதிகாரிகளும் கூட எவ்வளவோ இன்னல்கள் மத்தியிலும் அடங்கி ஒதுங்கிக் கடமை புரிவது வேதனைக்குரியதாக இருக்கிறது. 18 பெண்கள் உட்பட 80 உத்தியோகத்தர்கள் கடமை புரியும் இப்பணிமனைக்கு ஒரு மல சல கூடமே இருப்பதால் மிகவும் கஷ்டப்படவேண்டியிருக்கின்றது.

54 ஆஸ்பத்திரிகள், 7 சுகாதார அதிகாரிகள் கந்தோர், 10 பல் வைத்திய நிலையங்கள் என்பவற்றுக்கு தலைமையகமாக விளங்கும் இப்பிரதான பணிமனைக்கோ ஒரு வெளிநாட்டு நிறுவனமும் உதவி செய்ய முன்வரவில்லை கச்சேரிக்கும் இதைப்பற்றி அறிவித்திருந்தும் புனர்வாழ்வு நிதி ஒன்றும் கிடைக்கவில்லை.

எனவே எவ்வளவோ இன்னல்கள் மத்தியில் கடமை புரியும் உத்தியோகத்தர்களை தொடர்ந்தும் கஷ்டத்தில் விடாமல் இதற்கான நடவடிக்கைகளை இத் திணைக்களத்துடன் தொடர்பான அதிகாரிகள் நிவர்த்தி செய்ய முன்வருவார்கள் என தாம் நம்புவதாக யாழ் சுகாதார திணைக்களக் கணக்காளர், திரு.எஸ்.எக்ஸ். ஞானசேகரம் தெரிவித்தார். (04)

## யூ. எஸ். ஐ. எஸ். அதிகாரி தகவல்

# 1982க்குப் பின்னர் கல்வித் தொடர்புகள் இடம் பெறவில்லை

''1982ம் ஆண்டுக்குப் பின்னர் எமக்கிடையிலான கல்வித் தொடர்புகள் எதுவும் இடம் பெறவில்லை இனிவரும் காலங்களில் எமக்கிடையிலான கல்வித் தொடர்புகள் அதிகரித்து முன்னேற்றம் காண வேண்டும் உயர் கல்விக்காக நாம் பல உதவிகள் செய்யவுள்ளோம்.''

இவ்வாறு நேற்று நாவலர் மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்க உயர் கல்வித்துறையில் நிகழும் மாற்றங்கள் சம்பந்தமான புத்தகக் கண்காட்சியில் கலந்து கொண்டு பேசிய அமெரிக்க தகவல் திணைக்கள அதிகாரி திரு றோஸ் தெரிவித்தார்.

இக் கண்காட்சியை யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜா திறந்துவைத்தார். இவ்விழாவில் யாழ்மாநகர ஆணையாளர் திரு வி. பி. பாலசிங்கம் கே. நேசையா ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர், (03)

## பிஜி இராணுவ அரசு உத்தரவு

# பிஜியில் உள்ள இந்தியதூதரகம் இன்றுடன் மூடப்பட வேண்டும்

இன்னும் இருபத்தி நான்கு மணி நேரத்தில் பிஜியில் உள்ள இந்திய தூதரகம் மூடப்படவேண்டும் என பிஜி இராணுவ அரசு உத்தரவிட்டுள்ளது.

தூதரகத்தில் பணிபுரியும் நூற்றுக்கணக்கான இந்தியரும் பிஜியை விட்டுவெளியேற ஒரு வார கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

1987 இல் பிஜியில் உள்ள இந்திய வம்சாவளி அரசை அந்நாட்டின் பூர்வீக இனத்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஜெனரல் ரபூக்கா இராணுவ சதி மூலம் கவிழ்த்தமை தெரிந்ததே.

# வடகிழக்கு பாடசாலைகள், கழகங்களுக்கு இடையேயான கிரிக்கட் சுற்றுப்போட்டி

வடகிழக்கு மாகாண கல்வி கலாசாரவிளையாட்டுத்துறை அமைச்சினால் வடகிழக்கு பாடசாலைகள், கழகங்களுக்கிடையிலான கிறிக்கட் போட்டி ஒன்றினை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

40 ஓவர்கள் கொண்ட இப்போட்டி சம்பந்தமான கலந்துரையாடல் வடகிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் திரு கே. சந்திரராசா தலைமையில் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளரின் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை மாலை 3:00 மணிக்கு நடக்கவுள்ளது,

இக் கூட்டத்திற்கு கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் வடகிழக்கு மாகாண விளையாட்டுத்துறைபணிப்பாளர் திரு S.மரியதாஸ்உதவிப்பணிப்பாளாதிரு ஏ எஸ் குணரெட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்

பாடசாலை அதிபர்களையும் விளையாட்டுத்துறை ஆசிரியர்களையும் கழகங்களின் தலைவர், செயலாளர்களையும் தவறாது சமூகம் தரும்படி வேண்டப்படுகின்றனர்

# சலவைத் தொழில் செய்வோர்க்கு நிவாரண உதவி

பாதிக்கப்பட்ட கரவெட்டியாக்கருவிலுள்ள 18 சலவைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் சலவைத் தொழில் உபகரணங்களைக் கையளிக்கவுள்ளது.

இச்சலவைத் தொழிலாளர்கள் அனைவரும் இலங்கை, இந்திய இராணுவங்களினால் பாதிக்கப்பட்டவர்களாவர். (15)

## அகில இலங்கை கலாசார அமைச்சு நடாத்தும்

# இந்து சமய இறுதிப்போட்டி பரிசளிப்பு விழா கொழும்பில்

(பருத்தித்துறை)

அகில இலங்கை ரீதியில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட இந்து சமய இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இம் மாதம் 26 ம், 27 ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டிகள் 26 ம் திகதி கொட்டாஞ்சேனை விவேகானந்த மகாவித்தியாலயத்தில் நடைபெறும். பரிசளிப்பு விழா 27 ம் திகதி புதிய பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் இந்து சமய கலாசார தமிழ்மொழி அமுலாக்கல் இராஜாங்க அமைச்சர் திரு.பி,தேவராஜ் தலைமையில் நடைபெறும்.

உல்லாசப் பயணத்துறை கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ்.தொண்டமான் பரிசளிப்பு விழாவிலே பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார் தேசிய மட்டத்தில் 153 மாணவர்களுக்கும்மாவட்ட மட்டத்தில் 153 மாணவர்களுக்கும் இப்பரிசளிப்பு விழாவிலே பரிசில்கள் வழங்கப்படும். (15)

# இலங்கை வங்கிக் கிளையில் சனிக்கிழமை நிவாரணம்

ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி பிரதானக் கிளையில் எதிர்வரும் சனிக்கிழமை (26,5.90)காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை மீளக் குடியமர்தலுக்கான உதவிப் பணமும் (1,000 , 2,000) உற்பத்தித் திறன் வாய்ந்த நன்கொடைப் பணமும் (4,000) கீழ்க்காணும் கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு வழங்கப்படும்,

மீளக் குடியமர்தலுக்கான உதவிப் பணம் 1,000 ரூபா கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, அத்தியடி, சுண்டிக்குளி, யாழ் பட்டினம், பெரியகடை, கொட்டடி, நாவாந்துறை, சோனகதெரு, அரியாலை மேற்கு, நல்லூர் தெற்கு, கிராமசேவகர் பிரிவு மக்கள் பெறுவர்

ரூபா—2,000 நிவாரணம் ஈச்சமோட்டை, வண்வட மேற்கு, திருநெல்வேலிமேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் மத்தி பகுதி மக்கள் பெறுவர்.

குடும்பங்கள் உற்பத்தித் திறன் வாய்ந்த நன்கொடைப் பணம் ரூபா 4,000 கொழும்புத்துறை, பெரியகடை, கொட்டடி, நாவாந்துறை, சோனக தெரு, பத்தமேனி அச்சுவேலி வடக்கு, சிறுப்பிட்டி, உரும்பிராய்மேற்கு, இருபாலைப்பகுதி மக்கள் பெறவுள்ளனர்.

# ரேபிள் ரெனிஸ் சீனா சாம்பியன்

நேற்று முன் தினம் நடைபெற்ற உலகக்கிண்ணத்திற்கான ரேபிள் ரெனிஸ் இறுதிப் போட்டியில் சீனாவும் சுவீடனும் வெற்றி பெற்றிருக்கின்றன.

ஆண்களுக்கான அரை இறுதிப் போட்டியில் மூன்றுக்கு பூச்சியம் என்ற ஆட்ட எண்ணிக்கையில் சீனா வடகொறியாவைத் தோற்கடித்தது,

இதே பிரிவில் இதே அடிப்படையில் சுவீடன் இங்கிலாந்தைத் தோற்கடித்தது.

# கோழி வளர்ப்பை ஊக்குவிக்க வடமராட்சியில் கடன்

(பருத்தித்துறை)

வடமராட்சி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் வடமராட்சிப் பகுதியில் கோழி வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொண்டுள்ளது.

கோழி வளர்ப்பில் ஈடுபடவுள்ள சங்கத்தால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு முதற் கட்டமாக சங்கம் 2000 ரூபாவைக் கடனாக வழங்கவுள்ளது.

இப் பணத்தை புலோலி ப. நோ.கூ.சங்க கிராமிய வங்கி முகாமையாளர் அங்கத்தவர்களின் சேமிப்புக் கணக்குப் புத்தகத் திலிட்டு வழங்குவார். இம் முதற்கட்ட கடனைப் பெறுபவர்கள் கோழிக் கூட்டை அமைக்க வேண்டும் இரண்டாம் கட்ட நிதி உதவியாகிய 1,500 ரூபா கோழிக் குஞ்சு 40,கோழித்தீன் உபகரணங்கள் கொள்வனவுக்காக வழங்கப்படும். பின்னர் 1,500 ரூபா கடன் வழங்கப்படும். (15)

# கிராம சேவக:க்ள் கலந்துரையாடல்

யாழ்மாவட்டகிராமசேவை அலுவலர்களின் செயலகப் பிரச்சனைகளும், எதிர்கால நடவடிக்கைகளும் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் மனோகரா தியேட்டரில் நடைபெறவுள்ளது.

### வீடமைபபுக்கான...

பட்ட தொகையிலும் கூடிய எண்ணிக்கையில் விண்ணப்பதாரிகள் உள்ளார்கள் எனத் தெரிய வந்துள்ளமையால் விண்ணப்பப் படிவம் வழங்கப் படும்காலம் சில தினங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாா சபை முகாமையாளர் திரு. இ. மரியான் தெரிவித்துள்ளார் (4)

### கிளிநொச்சி...

த்திலிருந்து 200ரூபாவாக சம்பளம் உயர்வுடன் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேற்படி சங்க வளர்ச்சிக்கு தற்போதைய புதிய நிர்வாகமும், பணியாளர்களும், சங்க அங்கத்தவர்களும், நலன்விரும்பிகளும் ஒத்துழைப்புக் காரணத்தால் சிறப்புடன் நடைபெற்றுக் கொண்டிருப்பது குறிபபிடத்தக்கது. (ப-6)

### வட ௪ குக/ீழக்கு...

திற்கு இவ் உபகரணங்களைக் கொண்டுவருவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று யாழ் செயலகத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் கொழும்பிற்கு வந்து சேரும் இவ் உபகரணங்களை உடன் வடக்குக் கிழக்குப்பகுதிகளுக்கு அனுப்புவது தொடர்பாகவே தற்போது ஆராயப்பட்டு வருகின்றது. (03)

# இன்னும் நிவாரணம் பெறாத குடும்பங்கள் குறித்து பேச்சு

யாழ் மாவட்டத்தில் மீளக் குடியமர்தல் நிவாரணம் பெறாதுள்ள 32 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

காலம் தாழ்த்திப் பதிந்த காரணத்தினாலே மேற்படி குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை.இவர்கள் உதவி அரசாங்க அதிபர் ரீதியாகப் பிரிக்கப்பட்டு பகுதி பகுதியாக நிவாரணம் வழங்கும்படி புனர் வாழ்வு அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது.

இக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சு பின் நிற்பது தெரிந்ததே. எதிர் வரும் 31ம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ள அரசாங்க அதிபர் மட்டக்கூட்டத்தில் இது பற்றி பிரஸ்தாபிக்கப்படவுள்ளது. (03)

### வாகன...

மதிப்பத்திரம் பெறுவதற்கு தென்பகுதிக்கே செல்கின்றனர். (35)

# உள்ளூராட்சி தேர்தலில் ஸ்ரீ. சு. கட்சி

நாட்டில் உள்ள 260 பிரதேச சபைகளுக்கும் 12 மாநகர சபைகளுக்கும் 39 நகர சபைகளுக்குமான தேர்தல்கள் எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது.

இத் தேர்தலில் நாற்பது வீதமானோர் இளைஞர்களே போட்டியிடவுள்ளனர். ஏறத்தாள முப்பதாயிரம் பேர் இத் தேர்தல்களில் பங்கு பற்றலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதே சமயம் இந்த உள்ளூராட்சிதேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பங்கு பற்றலாம் என தெரிவிக்கப் படுகின்றது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட் சிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 6ஃ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 24-05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது